1272

ஜகன்மோகினி

JAGANMOHINI

1—3—59

25 நயா பைசா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1959
MADRAS

1272
1.59.

ஜகன்மோகினி

ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென் னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

மார்ச் 1959. மலர் 36, இதழ் 3. விளம்பி ஹு மாசி மீ

விஷய அட்டவணை

காந்தி சகாப்தம்
—வி. கே. பார்த்தசாரதி 1

ஸம்சார சக்கரம்
—ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் 5

கூ...
—உண்மை விளம்பி 8

வ்ருதாதிகளின் மகிமை
—ஏ. சரோஜாபாய் 11

பின்னணி இசைமண்டலம்
T. M. சௌந்தரராஜன்
—பி. வி. ஜயராமன் 15

அன்பு அருவி (தொடர் கதை)
—விஜயலக்ஷ்மி வரதராஜன் 20

குளிர்ந்த நெஞ்சம்
(தொடர் கதை)
—வை. மு. கோ. [25—32]

மக்கள் வாழ்க்கையும் இயற்கை வனப்பும்

நர்சிங்

டில்லி நர்சிங் கல்லூரியில் பயிற்சி பெற்றுவருகிற ஒரு நர்ஸ் அண்டையிலுள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்திருக்கிறார். எளிய வாழ்க்கை நடத்தி வருகிற கிராம மக்கள் அந்த நர்ஸை அன்புப் புன்னகையுடன் வரவேற்கிறார்கள். இத்தகைய மக்களிடையேதான் அவர் சமுதாய சேவையில் ஈடுபடப்போகிறார்.

கிராமப் பிரதேசங்களுக்கு சுகாதார சேவைகளை விஸ்தரிப்பதில், பயிற்சிபெற்ற சிப்பந்திகள் போதிய அளவு இல்லாதது மிகப்பெரிய இடையூறுகளில் ஒன்றாக இருந்து வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிக எண்ணிக்கையுள்ள நர்சுகள், மிட்வொய்புகள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள், வைத்தியக் கல்லூரிகளிலும் ஆஸ்பத்திரிகளிலுமுள்ள இதர தொழில் நுட்பச் சிப்பந்திகள் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிற்சித் திட்டங்களுக்காக இரண்டாவது திட்டத்தில் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆஸ்பத்திரிப் படுக்கை வீதமும், 5000 மக்களுக்கு ஒரு நர்ஸ், ஒரு மிட்வொய்ப் வீதமும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

காந்தி சகாப்தம்

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

"அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
பழமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

[பாரதியார்.]

ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றி, இந்தியர் அடிமைத் தனத்தைப் போக்கிட காங்கிரஸ் கட்சி அமைப்புண்டு, அநேகமாண்டுகளாய், சாம, பேத, தான, தண்டமுறைகளால் முயன்று வந்தது. ஆயினும், கடைசியாக காங்கிரஸ் கட்சியின் பிரதமராயும், ஆனால் அக்கட்சியின் அங்கத்தினரென்ற பிருதில்லாதவராயும் இருந்த இந்தியதேசீயப் பிதாவாகிய காந்தி ஒருவராலேயே, கத்தியின்றி, ரத்தமின்றி, கசப்பின்றி, நமது சொத்தை, நமது பொறுப்பாளி போல் கையாண்டு வந்த அன்னியர், நமது கைகளில் ஒப்புவித்துவிட்டு, நமது ஆட்சிப் பொறுப்பினின்றும் தாமே அகன்றுவிடச் செய்ய முடிந்தது.

மைனர்களுக்காக அவர்களது சொத்தைப் பரிபாலித்து வந்த கார்டியன், அந்த மைனர்கள் மேஜர்களாகியதும் அவர்களிடம் அவர்களது சொத்துக்களை ஒப்படைத்து விலகிக்கொள்வது போன்ற முறையில், கார்டியனாகிய அன்னியருக்கும் மேஜர்களாகிய சொத்துக்காரர்களுக்குமிடையே மத்தியஸ்தராயிருந்து, சமாதான முறையில் சொத்துக்களைச் சொத்துக்குறியவர்களிடம் வாங்கிக் கொடுத்துவிட்டார் மகாத்மா காந்தி.

நம் கடமையைச் செய்கிறோமா?

சொத்தைப் பெற்ற மேஜர்கள் என்ன செய்கிறார்கள்?—முதல் முதலில் அவர்களது கடமை என்ன?

தமது சொத்தைத் தாம் பெற்றதும், இதுகாறும் கார்டியனாயிருந்தவர்களுக்கு வந்தனமும், சொத்து பாழ்போகாது இடை நின்று பெற்றுக் கொடுத்தோருக்கு நன்றியும் செலுத்தி, கிடைத்த சொத்தை சீரிய முறையில் சிறப்புடன் பெருக்கித் தாமும் நற்பெயருடன் விளங்கவேண்டுவது, சொத்தையடைந்த சுதந்திரரது கடமையாகும்.

1-3-59.

இந்தியராகிய நாம், சுதந்திரம் பெற்றதும், இந்த நமது முதல் கடமையைச் செய்தோமா? கார்டியன் போல் நம்மீது அதிகாரம் செலுத்திவந்த வெள்ளையருக்கு வந்தனமளித்தோமா, அல்லவா யென்பதைப் பின்னர் கவனிப்போம். ஆனால் அவர்கள் நமது சொத்தைப் பரிபாலித்து வந்த முறைகள், அவர்களது சுய லாபத்திற்கே பலன் தந்து வந்தன வென்று நாம் கருதுவோமாயினும், அவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றதுமே, அவர்கள் பரிபாலித்து வந்த முறைகளையே நமது சந்தர்ப்பத் தேவைகளுக்கு வேண்டியபடிச் சமயோசிதமாய்ச் சிறிது சிறிதாக மாற்றிக்கொண்டு, அதை முறைகளையே நமதாகக் கொண்டு இந்தியச் சுதந்திரச் சொத்தைப் பரிபாலித்து வந்தோமானால் நமது சொத்தும் சிதைவடையாது; அவர்களுக்களித்த அமோகப் பலனையே நமது சுயராஜ்யத்திற்கும் கொடுத்துச் சிறப்புறச் செழித்து வளர்ந்திருக்கும். ஆனால், அப்படிச் செய்யாது விட்டு, புதிதாகப் பணம்படைத்த பேராசைக் குடும்பத்தினர், குடும்பத்தை அடிமைபோல் அடக்கியேனும் குடும்ப சொத்தை ஒழுங்குடனும் சிதையாதும் அதிகாரம் அகன்றதும், மூலைக்கொருவராகச் சிதறியோடி, ஒரே குடும்ப சொத்தாக இருந்ததைச் சின்னாபின்னப் படுத்திப் பங்கிடு செய்யவும், பங்கில் கிடைத்ததையும், எப்பங்குடையோர், தம்மிடைச் சச்சரவிட்டு தத்தம் மனம் போனபடி, வருவதைக் குறித்த சிந்தனையின்றித் தான்தோன்றித் தனமாய், தற்போதைய சுயலாப சுகத்தையே பெரிதாகக் கருதி, தமது இஷ்டப்படிக்கெல்லாம் ஆக்கியும், அழித்தும், சிதைத்தும், உருமாற்றியும், பெயர் மாற்றியும், செயல் மாற்றியும், பொருள் மாற்றியும், குணமும் மாற்றியும், பலனும் மாற்றியும், கிடைத்ததை கிடைத்தபடி கொள்வது பிசகென்ற பிசகான எண்ணத்தில், வேறு புதியதாக மாற்றும் மனப்பான்மையிலேயே சுதந்திரத்தைச் சுயேச்சைச் சுயக்யாதிகளுக்கே பிரயோசனப்படுத்தப் பாடுபடுவோமாகிறோம்.

அதனால் கண்ட பலன், சுதந்திரம் பெற்று பதினோராண்டு முடிந்தும், இருந்த சுகமும் அழிந்து, இனியும் சுகம் காணும் காலம் சிந்திக்க இயலாது, இன்றும் சிறிதும் சுகமனுபவிக்க முடியாது, திட்டங்களிட்டு, கூட்டங்களிட்டு, மட்டங்கள் நிறவி கொட்டங்கள் அடக்கி, பட்டங்கள் மாற்றி ஆட்டங்கள் போட்டு வாட்டங்களுற்று, வட்டங்களில் சிக்கி, வாய்த்த வீடும் போய் அடுப்பு நெருப்பும் அணைந்த கதையாய், செய்வதறியாது, செய்யவேண்டியது ஓராது, கரைதேட வெட்கி, ஓடும் வெள்ளத்தில் சிக்கி, உயிருள்ள வரைக்கும் உண்டது லாபமென்ன கைக்குச் சிக்கியதைப் பற்றிப் பிழைப்பதாக விழிக்கிறோம்!

சுதந்திரம் பெற்றும் சுகம் ஏன் கிட்டவில்லை ?

என்[illegible]! இந்தியாதான் ஆத்ம அறிவிற்கும் [illegible]திறகும் பிறப்பிடமென அன்னியர் போற்றி வருகின்றனர். நமது காந்தி மகாத்மாவும் அந்த ஆத்ம பலங்கொண்டே மிருக பலம்மிக்க மேல் நாட்டாரை, மகிழ்வுடனேயே, மனமொப்பியே நமது ஆத்மபலத்திற்கு வணங்கச் செய்தார்! ஆனால் அப்படி

வணங்கிச் சென்றவர்க்கும் வணக்கம் கூறாது, அவர்களை நம்மை வணங்கும்படி செய்தவர்க்கும் நன்றி செலுத்தாது, கைக்கு எட்டாத கிட்டியதும், அதை நமது 'காந்தித் தாத்தா' வைத்துப் போன நமது அரிய பிதிரார்ஜிதமெனப் போற்றி வளர்க்க யோசியாது, இன்றிருப்போரது தனித்தனி சுயார்ஜிதம் போல அப்பிதிரார்ஜிதத்தைப் பாவித்துச் சிதைத்துப் பாழாக்க விழைகிறோம்! இதைவிட நன்றிகெட்ட செயலுண்டோ?

'நன்றி மறப்பது நன்றன்று
நன்றல்லதன்றே மறப்பது நன்று'

ஆங்கிலர்:நம்மைமுன்னர் அடக்கியாண்டதற்காக அவர்கள் அகன்றபின்னர் அவர்மீது துவேஷம் பாராட்டாது, மறந்திருக்க வேண்டும். காந்தி மகான் வாங்கித் தந்த இந்தியாவில் சுதந்திரம் கிடைத்த தேதி முதலே காந்தி சகம் ஸ்தாபித்து நமது வருடக்கணக்குகளை அதன்படி கணக்கிட்டு வந்திருக்க வேண்டும். இன்று காந்தி சகம் ஆரம்பித்து 11 வருடங்களும் 6 மாதமும் முடிந்தன. நடப்பது காந்தி சகம் 11-வது வருடம் 7-வது மாதம்—மாசி மாதம், அல்லது பிப்ரவரி மாதம், அல்லது பங்குனி மாதம். இம்மாதிரி, அன்றுமுதலே காந்தி சகம் ஸ்தாபித்து ஆட்சி தொடங்கியிருந்தோமானால், காந்தி மகானுக்குச் செலுத்தவேண்டிய நன்றியை முறைப்படிச் செலுத்தியிருப்பதோடு, அவர் கையாண்ட சீரிய முறைகளும், நாட்டின் நன்மைக்கென இவர் போதித்துவந்த அரசியல், பொருளாதார சமூக முறைகளும் நமதுநாட்டில்நிலைத்துமக்கள் மனத்தில்ஊன்றி பயிராகி,அவரது உண்மைத் தொண்டர்களாகிய அரசியல் அதிகாரிகளால் சாகுபடிசெய்யப்பட்டு இன்று அமோக விளைவு கொடுத்திருப்பதாகும். அதைவிட்டு காந்தியை மறந்து அவரவராக ஏதேதோ வாதித்து ஏதோ புதிய சகாப்தம் கொண்டோம்; நாணயம் மாற்றினோம்; அளவு மாற்றினோம்; கல்வியைக் கலைத்து மாற்றி உருப்படாது செய்தோம்; கற்பை மாற்றினோம்; தெய்வ நம்பிக்கையை மாற்றினோம்; சதிபதி பாந்தவ்யத்தைச் சிதைத்தோம்; ஏகக் குடும்பமென்ற நமது தனித்த ஒப்பிலாச் சீரமைப்பைச் சிதைத்தோம்; பொதுநல சிந்தனையை மறந்தோம்; சொத்துரிமைகளை மாற்றினோம்; நில உரிமைகளை நிலைகெடச் செய்தோம்; நாகரீகத்தை நலமிழக்கச் செய்தோம்; மனமிழந்தோம்; குலம் இழந்தோம்; தெய்வம் இழந்தோம்; மதம் இழந்தோம்; சுகம் இழந்தோம்; இருந்ததுகளையும் இழந்தோம்; இனி, இழப்பதற்கும், சிதைப்பதற்கும் அழிப்பதற்கும், மாற்றுவதற்கும் எவை உள என்று போட்டியிட்டுப் பதைத்துப் போராடுகிறோம். சுதந்திர மக்களாகிய நாம் நமக்குள்ளேயே! அற்பனுக்கு ஐச்வர்யம் கிடைத்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பதுபோலாயிற்று நாம் சுதந்திரம் பெற்ற பெருமை. மதியற்ற மைனர் சொத்துக்களைப் பெற்றதும் ஆடும் ஆட்டங்கள் போலுள்ளது நமது நிலைமை. ஏன்? சுதந்திரம் பெற்றும், **சுகம் ஏன் கிட்டவில்லை?**

ஏனென்றால், நன்றி மறந்தோம். நாம் பெற்றிருப்பது காந்தி மகான் சொத்து; நாம் வாழ்வது காந்திமகான் கொடுத்த பிச்சை

கொண்டு; நாம் இருப்பது காந்தி சகம்; நாம் நடத்தவேண்டிய அரசியல் முறை காந்தி மகான் கொள்கை கொண்டு; நாம் வாழ வேண்டிய முறை சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டியது; நாம் வணங்கவேண்டியது நமது குலதெய்வங்களை; நாம் போற்றவேண்டியது அடுத்துளோர் குலதெய்வங்களை நாம் தூற்றவேண்டியது நமது அன்புப் பான்மையையும் சகிப்புத் தன்மையையும், போதுமென்ற மனத்தையும் பேதிக்குமவைகளை. ஆகவே, இனி, சுதந்திர இந்தியா சுதந்திரத்தோடு சுகித்திருக்க வேண்டுமானால், இன்று முதலாவது இந்திய ராஜ்யத்தில் காந்தி சகம் நடைமுறையில் நிலவட்டும். காந்தி சகம் வந்த பின்னர்?—அடுத்ததாகக் கவனிப்போம்.

"தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துனிவினை மற்றுங்கு
இழிபடுபோர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திட்த் துணிந்தனை பெருமான்!"

"பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீவாழ்க! வாழ்க!"

வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம்

வை. மு. விஜயலக்ஷ்மி எழுதியது

பல அழகிய கலர் படங்களுடன்

★ **விலை ரூ. 4.** ★

ஸம்சார சக்கரம்.

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

கணக்கு வைப்பது

அன்றைக்கு எங்கள் கிளப்பில் சுவாரஸ்ய மானதொரு சம்பாஷணை நடந்தது.

"ஏன் லலிதா, நேற்று கிளப்புக்கு வரவில்லை?" என்று மிஸஸ் உமாபாய் கர்வே கேட்டாள்.

"மாதக் கடைசி இல்லையா? கணக்கு பார்க்கவேண்டி இருந்தது. கணக்கில் இருபது ரூபாய்கள்—சில்லரை குறைவு வந்தது. எப்பொழுதும் இவ்வளவு குறைவு (Unaccounted) வந்ததே கிடையாது. கணக்குப் போட்டுப் போட்டு போதுமென்று ஆகிவிட்டது. கிளப்புக்கு வர மனது எப்படி வரும்?" என்று லலிதா லக்ஷ்மண் அலுத்துக் கொண்டாள்.

கையிலிருந்த குளிர்ந்த் பானத்தைப் பருகிவிட்டு டம்பளரைமேஜை மேல் வைத்த தேவகீ ராஜாராம் —"ஏன்தான் நீங்கள் எல்லோரும் கணக்குக் கணக்கு என்று பாடுபடுகிறயளோ! நம் கையில் உள்ள பணம் செலவழிந்தது நமக்குத் தெரிந்த விஷயம்தானே. இன்னும் கணக்கு எழுதி வைப்பானேன்? நான் ஆகக் கூடி கணக்கு எழுதுவதே கிடையாது. என் கணவரும் அப்படிதான். வந்த சம்பளத்தை பாங்கில் போடுவார். கையிருப்பிலிருக்கும் பணம் செலவழிய செலவழிய — பாங்கியிலிருந்து Draw செய்வார். கணக்கை வேறு மெனக்கெட்டு யார் எழுதுவது? சுத்த உபத்திரவ வேலைடு அது!" என்று அலக்ஷியமாகப் பகர்ந்தாள்.

எனக்கு எரிச்சல் மூண்டது. "நீ சொல்வது ரொம்ப வேடிக்கைதான் தேவகீ. அன்றாடம் கணக்கு எழுத அலுத்துக் கொள்ளும் குடும்பப் பெண்ணும் உண்டா என்ன? நாள்தோறும் நாம் செய்யும் காரியங்களில் கணக்கு எழுதி வைப்பது வெகு முக்கியமான வேலை அல்லவா? குடித்தனம் தொடங்கும் பொழுதே புதுத் தம்பதிகள் தங்கள் வரவுக்குத் தகுந்தபடி Budget தயாரித்துக்கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் செலவு செய்து,வரவு செலவை சரிகட்டிக் கொண்டு போவது தான் நேர்மை. அப்பொழுது தான் மனம் போனபடி, என்றால் கண்டபடி செலவழிக்க மனம் இடம் தராது. சிக்கனமாக இருக்க முடியும். மாதா மாதம் சமயத்துக்கு என்று சிறுகச் சிறுக சேர்க்கவும் கை வரும்" என்று இதமாகச் சொன்னேன்.

"ஜயலக்ஷ்மி சொல்வது உண்மைதான். கணக்கு வழக்கு எழுதி வைக்காவிட்டால், கைக்கு பணம் வரும்பொழுதே செலவழிந்து விடுகிறது! நேற்று நூறு ரூபாய் கொண்டுவந்து கொடுத்தார். இன்று சாயந்திரத்துக்குள் என் கையில் அதில் ஒரு நயா பைஸா கூட மிச்சம் இல்லை. அதெப்படி செலவழிந்ததென்றே தெரியவில்லை......!" திருதிரு

வென்று விழிக்கிறோம். கணக்கு எழுதுவது என்று ஒரு குறிக்கோள் வைத்துக்கொண்டோமென்றால் கைப்பிடித்து செலவழிப்போம்... குடித்தனத்துக்கே ஆகட்டும், அரசாங்கத்துக்கே ஆகட்டும் கணக்கு வைப்பது, என்றால் Budget வைப்பதுதான் சரியான அஸ்திவாரம். மனம் போன போக்கில் செலவழிக்காமல் இருக்க வேண்டும் என்றால் இது ஒரே வழிதான். ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் வீட்டுக் கணக்கை அன்றாடம் எழுதித்தான் ஆகவேண்டும்'' என்று மிஸஸ் உமாபாய் கர்வே என்னை ஆமோதித்துப் பேசினாள்.

மிஸஸ் தேவகீ ராஜாராம் மீது எங்கள் இருவரின் பேச்சும் நல்ல பரிணமத்தை உண்டு பண்ணிற்று. ஆனால், அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டு — "எனக்கு என்னவோ இந்த 'நியூஸென்ஸ்' வேண்டி இருக்கலே. சுவாமி கொடுத்ததை ஹாய்யாக, சிரமமின்றி செலவழிக்காமல் அதற்கும் ஒரு கட்டுப்பாடா?'' என்று அலுத்துக் கொண்டாள். இனி இந்தப் பேச்சு வளர்ந்தால் அழகன்று என்று பேச்சை மாற்றிவிட்டேன். அன்று இரவு இதைப்பற்றிய கட்டுரையொன்று எழுதினால் பெண்களுக்குப் பயனபடுமே என்று தோன்றிற்று. அதன் விளைவுதான் இந்தக் கட்டுரை.

சாதாரணமாகக் குடும்பப் பெண்கள் கணக்குப் புத்தகம் வைக்கும் முறையை அறிந்திருப்பார்கள். கணக்குப் புத்தகத்தில் கீழ்க் கண்டவாறு (Calumn) 'காலம்' வகுத்துக்கொண்டு எழுதுவது நல்லது. கீழே மாதிரி தந்திருக்கிறேன்:—

தேதி	வாங்கிய வஸ்துவின் விபரம்	வரவு	செலவு.
2-5-19	பேங்கிலிருந்து அல்லது கணவரிடமிருந்து	200-0-0	
3-5-19	மளிகைக் கடைக்கு		50.00
	கறிகாய்		0.50
4-5-19	வண்ணானுக்கு		7.00
5-5-19	விறகும், கரியும்		8.00
	மாத உண்டியலுக்கு		2-00
	மருந்தும், வைத்தியரும்		17-25
	வீட்டு வாடகை		40-00
	பால் காரன்		35.00
	எலெக்ட்ரிக் பில்		6.00
	தையல்காரன்		9.00
			174.75
		கையிருப்பு	24.16
		கணக்கு வராதது	1.09
		மொத்தம் ...	200·00

மாதா மாதம் உண்டியலில் சிறுகச் சிறுக ஆபத்தனம் என்று சேர்த்து வந்தால் திடீர் என்று வீட்டில் யாராவது காயலா விழுந்தால் வைத்திய உதவிக்கும் அல்லது உற்றார் உறவினர்கள் ஊரிலிருந்து வந்து சில நாள் தங்கிவிட்டுப் போனால் அதிகப்படி செலவுக்கும் உண்டியலிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். மாதந் தோறும் மாதத் துவக்கத்திலேயே அந்த மாதச் சராசரி வரவு செலவு பட்டியலை (Butget) தயாரித்து வைத்துக் கொண்டு, அதற்கு ஏர்வையாக செலவழிக்க வேண்டும். வரவு செலவுபட்டியல் அல்லது Budgetட்டில் 'இந்த மாதம் இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிக்குப் பணம் கட்ட வேண்டும். ஆதலால் தையல்காரன் சிலவை குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்துக் கொள்கிறோம். ஆனால் மாத நடுவில் நம் சிநேகிதி ஒருவள் புது பேஷனில் புடவையொன்றை வாங்கிக் கட்டிக் கொண்டுருப்பதைப் பார்த்துவிட்டாலோ, நாமும் ஆசைப்பட்டு அதே போல் ஒன்றை விலைக்கு வாங்கி வந்து கட்டிக் கொண்டு விடுகிறோம். பிறகு இன்ஷ்யூரென்ஸுக்கும் பணம் கட்டிவிட்டு, மாதக் கடைசி வரைக்கும் வீட்டு செலவுகளை சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறோம். வேறு வழி? கடன் வாங்க வேண்டியது தான்! அதற்கு அடுத்த மாதம்—'இந்த சினிமா—நாடகம் எதற்கும் போகக் கூடாது, 'ஷாப்பிங்' பொகவே கூடாது, கறிகாய் பழவகைகள் வாங்குவதிலும் பாதிக்குப் பாதி குறைத்துக் கொள்ள வேண்டும். பிந்திய மாதக் கடனை முதலில் தீர்த்து விட வேண்டும்' என்று தீர்மானித்துக் கொள்கிறோம். ஆனால், அந்த மாத ஆரம்பத்திலேயே நம் நேசி மோகன கிருஷ்ணசார் வாங்கி இருக்கும் எவர்ஸில்வர் தூக்கைக் கண்டு ஆசை மூழ்கிறது. விலை என்னவென்று விசாரித்துப் பார்ப்போமே என்று கடைக்குப் போகிறோம். அந்தத் தூக்குக்கு மேல் ஒரு தூக்கும், கூட அரை டஜன் எவர்ஸில்வர் பாத்திரங்களையும் விலை பேசி வாங்கிவந்து விடுகிறோம்! அதன பிறகு? அந்த மாதமும் பண முடையாகிக் கணவரைத் தொந்திரவு செய்கிறோம்?... இவ்வித தொந்திரவுகள் ஏற்படாமல் இருக்க நம் உள்ளத்தையும், விருப்பங்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு, மாத Budgetடிற்குள் செலவழிக்க கற்றுக் கொள்ள வேண்டும். கணக்கு எழுதுவதால் எவ்வளவு சௌகரியங்கள் பாருங்கள்!

கணக்கு வைப்பது என்றால் வெறும் வரவு செலவு கணக்கு மாத்திர மில்லை. ஒவ்வொரு விஷயத்துக்கும் கணக்கு வைப்பது அவசியம். பால் கணக்கு வெண்ணான் கணக்கு, குழந்தைகளின் பள்ளிக்கூட சம்பளம், பாத்திரப் பட்டியல், துணி மணிகள் லிஸ்ட், புத்தகப் பட்டியல் என்று...பிரத்தியேகக் கணக்குபுத்தகங்கள் வைப்பது நலம். அடிக்கடி அந்தக் கணக்குப் புத்தகங்களை பரிசிலனை செய்து பார்ப்பதற்கு அலுத்துக் கொள்ளக் கூடாது. இதுவே குடும்பப் பெண்களின் கடமை.

★

... சூ ...

— உண்மை விளம்பி —

பள்ளி வாழ்க்கையின் ஆனந்தமே இணையற்றது. கவலையின்றி திரியும் அந்த பருவமே வாழ்க்கையில் மகிழ்ச்சியான காலம். இளம் மாணவ மாணவிகள் ஆடும் ஆட்டமும், கூத்தும், கொண்டாட்டமும், பேசும் வேடிக்கைப் பேச்சுகளும் கணக்கில் கூறி வருணிக்க முடியாது. இச்சந்தர்ப்பத்தில் நான் மாணவிகள் படசாலையில் ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் ஹாஸ்யகரமான நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறேன்.

பள்ளி செல்வது படிப்பதற்கு மட்டுமா? சிநேகிதிகளைச் சந்திக்க, குதித்து விளையாட, சண்டையிட, பாட்டிக் கதைகள் பேச போன்ற பல்வேறு ருசிகர காரணங்களும் அதில் இணைந்திருப்பதையும் உத்தேசித்துத்தான்.

அப்படி எதிர் நோக்கும் மாணவி கூட்டத்தினருக்கு, உபாத்யாயினி வரவில்லை என்றால் அதைவிட சந்தோஷம் உலகிலேயே இல்லை என்று தோன்றுவதில் வியப்பென்ன?

ஒரு நாள் இரண்டு 'பிரியட்' சேர்ந்தாற் போல் கணக்கு. அன்றைக் கென்று உபாத்யாயினி விடுமுறை எடுத்திருக்கிறார். கணக்கு வகுப்பு முடிந்ததும் சாப்பாட்டு இடைவேளை! எவ்வளவு நன்றாக அமைந்தது.

என்ன செய்யலாம் என்று யோசிக்க முனைவதற்குள், ஒரு பெண் "சரஸா! சரஸா! ஏதாவது கதை சொல்லேண்டி" என்றாள். எல்லோரும் அத்திசைக்குத் திரும்பினோம். மற்றொருத்தி "எல்லோரும் கதை கேட்கலாம். ஆனால் கீழே தோட்டத்திற்குப் போய்விடலாம். பக்கத்து வகுப்பு சிடுமூஞ்சி டீச்சர் சீறிவிழும்" என்றாள்.

உடனே பட்டாளம் போல் கீழே தடதட வென்று ஓடினோம். கீழே வேறு ஒருவகுப்புக்கு விளையாட்டு நேரம். அதனால் அந்த மைதானத்தில் உட்கார முடியவில்லை. எங்களுக்கு சாப்பிடுவதற் கென்று ஒதுக்கு புறமாக உள்ள மரங்கள் அடர்ந்த தோட்டத்திற்குச் சென்றோம்.

சரஸா இயற்கையிலேயே தைரியசாலி. அவள் தாய், தந்தை, தாத்தா, பாட்டி எல்லோரும் ஏதோ ஒரு கிராமத்திலிருந்தார்கள். அவளும், அவள் தம்பியும் மதருஸில் இருந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி லீவிற்கெல்லாம் சரஸா க்ராமத்திற்கு போவாள். அப்போது அவள் தாத்தா, கட்டுக்கட்டாய் கதை கூறுவாராம். அதில் ப்ராதன இடம் பெறுபவை 'பேய் கதைகள்'.

தாத்தா தான் கேட்ட கதை, கற்பனைக் கதை, தான் நேரில் கண்டவை யெல்லாம் கூறுவாராம். ஆர்வத்தோடு அதையெல்லாம் கேட்டுவிட்டு ஊர் வந்ததும் எங்களுக்குக் கூறு

வாள். கதை சொல்லுவதில் கெட்டிக்காரி. அதுவும் அவள் கையைக் காலை ஆட்டிக் கொண்டு உணர்ச்சியோடு சொல்லும்போது அச்சம்பவங்கள் நேரிலேயே நடப்பதுபோல் தோன்றும். அதனுல் சரஸாவின் கதை என்ருல் வகுப்பில் முக்கால் பாகம் வந்துவிடுவோம்.

"நான் இன்று பேய்க் கதை சொல்லப் போகிறேன்" என்ற பீடிக்கையோடு ஆரம்பித்தாள். எல்லோரும் நெருக்கமாக அமர்ந்து கொண்டோம். பல பல குட்டி கதைகள் கூறிவிட்டாள்.

ஒரு கதையில், "எங்கள் தாத்தா வயல் பக்கம் போனுராம். அப்போது தூரத்தில் ஒரு பேய் வந்து கொண்டிருந்ததாம். ஆனுல், தாத்தா ரொம்ப தைரியசாலி யானதால் பயப்படவில்லை. துண்டை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டு, கையில் தடியுடன் நடந்து கொண்டே யிருந்தாராம். பேயோ தாத்தாவை நெருங்கி வந்து கொண்டே யிருந்ததாம் ... அப்போது..." என்று சரஸா சுவாரஸ்யமாகக் கூறிக் கொண்டிருந்தாள்.

"கூ"...என்று ஒரு சத்தம் திடீரென்று எழுந்தது. ஒரு பெண் "ஐயோ! அம்மாடி" என்று அலறியவாறு எழுந்து ஓடத் தொடங்கினுள். தொடர்ந்து "ஓ" என்ற இறைச்சலிட்டவாறு ஓட்டம் எடுத்தோம். ஒருவரா?...இருவரா?... இருபது பேரும்!

நெடுந்தூரம் ஓடி வந்து மூச்சு இறைக்க நின்ருேம். அசடு வழிய ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கிக் கொண்டோம். சிலர் முகங்களில் இன்னும் பீதி மறையவில்லை. சிலர் காரணமின்றி சிரித்தோம்.

சில நிமிடங்கள் கழிந்து "என்ன...என்ன"...என்று விளங்காமல் வினவினேம்.

"என்ன என்று கேட்கிறீர்களே! அந்த 'கூ' என்ற சப்தம் உங்கள் காதிலெல்லாம் விழவில்லை...ஏண்டி சரஸா! பேய் அப்படியா கத்தும்? உன் தாத்தாசொல்லியிருக்கிருரா?" என்று நடுக்கம் நீங்காத குரலில் முதலில் 'ஐயோ...அம்மாடி' என்று கூவிய பெண் கேட்டாள்.

சிலர் "ஆமாம்...ஆமாம்... எனக்குக்கூட சப்தம் கேட்டது" என்று ஆமோதித்தனர். சிலர் "எனக்கு ஒன்றுமே கேட்கவில்லை" என்று மறுத்தனர். இந்த தர்க்கத்திற்கிடையில் மீண்டும் முன்பு தோட்டத்தில் எழுந்த 'கூ' என்ற சப்தம் ஒலித்தது.

"ஆ...ஆ...இதே சப்தம் தான்" என்ருள் அந்தப் பெண். எல்லோரும் திடுக்கிட்டு சுற்றி கவனித்தோம். ஆனுல் வித்யா என்ற பெண் மட்டும் சாவதானமாக கையிலிருந்த எதையோ பெட்டிக்குள் போட்டு மூடினுள். மீண்டும் அதே ஒலி. எல்லோரும் அவளையும், அவள் பெட்டியையும் பார்த்தோம். ஒரு பெண் அவசரமாக அந்த பெட்டியை வாங்கி திறந்தாள். 'கூ' என்று கூவியது அது!

"ஹூம்...இதுதான் தோட்டத்திலும் கத்தியிருக்கிறது. ஏன் வித்யா?" என்று ஆரம்பிக்கும் முன், "பூ! இந்த ஓசையா கேட்டது...ஐயோ ராமா...நான் வகுப்பிலிருந்து

இளம்பும்போது இந்த ரப்பரை பெட்டியில் போட எடுத்தேன். ஆனால் அதற்குள் நீங்களெல்லாம் இளம்பிவிடவே ஞாபக மறதியாக அதையும் கையோடு எடுத்து வந்துவிட்டேன். பர்திக் கதை கேட்டுக் கொண்டிருக்கும் போது இந்த ரப்பர் வியர்வையில் கையெல்லாம் கசகசத்தது. அதனால் பெட்டியில் போட பாதி திறக்கும் போதே நீங்களெல்லாம் அலறியடித்துக்கொண்டு ஓடினீர்கள். நானும் உங்களுடன் வந்துவிட்டேன். இங்கு வந்து பெட்டியில் போட்டேன்...பூ— இந்த ஓசைக்கா பயந்து ஓடினீர்கள்?'' என்று வித்யா விஷயத்தை விளக்கி விட்டு, ஒரு பெரிய கேசை சுலபமாய் கண்டு பிடித்துவிட்ட ஸி. ஐ. டி போல் கர்வத்தோடு எங்களை ஆராய்ந்தாள்.

"சே...போயும்போயும் இந்த உயிரற்ற சிறிய ப்ளாஸ்டிக் டப்பியா, இருபது பேருக்கும் உதறலை உண்டாக்கி விரட்டியடித்தது. நல்ல பேய் கதை. நல்ல வேடிக்கை'' என்று சரஸா முத்தாய்ப்பு வைத்தாள்.

கொஞ்சம் நடுக்கம் நீங்கி நாங்கள் நகைக்க முற்பட்டோம். பிறகு வித்யாவின் பெட்டியை வாங்கி திறந்து, மூடி, ஓசை ஏற்படுத்துவது அனைவருக்கும் வேடிக்கையாய் விட்டது. ●

The following particulars regarding the ownership of the 'Jagan Mohini', 'the monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication ... Triplicane, Madras-5.

2. Periodicity of its Publication ... Monthly

3 & 4. Printer's & Publisher's
Name ... V. M. Parthasarathy
Nationality ... Indian
Address ... 26, Car Street, Triplicane, Madras-5.

5. Editor's Name ... Mrs. V. M. Kothainayaki
Nationality ... Indian
Address ... 26, Car StreetTriplicane, Madras-5.

6. Name and address of individual who owns the newspaper.

I, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. M. Parthasarathy,
Publisher.

Dated 1st March 1959

★வ்ருதாதிகவின் மகிமை★

மார்கழி குருவார பூஜை

— ஏ. சரோஜா பாய் —

—●✻●—

நகை காணாத பயத்தில் கை கால் உதரம் எடுத்துக்கொள்ள ஆரம்பித்தது. 'பெரிய ராஜ குமாரியின் நகைகளை துலைத்து விட்டால் மறுபடி எப்ப டித் திருப்பிக் கொடுப்பது... இப்படி அஜாக்ரதையாக இருந்து விட்டோமே...நமக்கு இங்கு மரியாதையே போய்விட் டதே. நாளைக்கு மாப்பிள்ளை வந்து நகை எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல் லுவது. ஐயோ! கடவுளே!... நாம் ஏன் இங்கு வந்தோம். என் கணவரைப் போல் மரியா தையாக வீட்டிலேயே இருந் திருக்கக் கூடாதா...இந்த என் தரித்திரநிலையில் அதை திருடி விட்டாள் என்று கூட ஜனங் கள் நினைத்துக் கூசாமல் சொல் லுவார்களே. என்ன செய்வது என்று நினைத்து அழுதவாறு மூலைக்கு மூலை ஓடிக்கொண்டு திரிந்தாள். இவள் தவிப்பதை எல்லாம் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பெண் இந்த நகை போன திகி லில் ஒன்றும் வாயில் போட வில்லை சாப்பிடவில்லை என்று மிக்க சந்தோஷத்துடன் சித்தி யிடம் வந்து "வா சித்தி! பூஜைக்கு தயாராய் இருக்கி றது" என்று கூப்பிட்டாள். இவளைக் கண்ட சித்திக்கு ஒரே பயமாய் விட்டது. உடம்பெல் லாம் நடுங்கிற்று. அவளைக் கெட்டியாக அணைத்துக் கொண்ட சித்தி, "அம்மா! எனக்கு என்ன பூஜை வேண் டிக் கிடக்கு. என் மனமே சரி யாக இல்லை. கண்ணே! நீ என்னைத் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டாயல்லவா?... ஒன்று சொல்லுகிறேன் கேள்: ஆனால் சொல்லவே பயமா இருக்கிறது.நீ கொடுத்துவிட்டு போன அத்தனை நகைகளும் காணாமல் போய்விட்டது. எப் படி போயிற்றோ எனக்குத் தெரியாது. சத்யமாக நான் அறியேன். என்னை மன்னித் துக் கொள்'' என்று கூறி அவள் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

தன் சித்தியை குனிந்து இழுத்து சமாதானப் படுத்தின பெண், "சித்தி! பயப்படாதே... போனால் போகிறது. நீ வேண் டுமென்று செய்யவில்லை. அது போனால் போகட்டும். எனக்கு எத்தனையோ செட்டு நகைகள் இருக்கிறது. வேறு நகைகள் போட்டுக் கொள்கிறேன்—நீ பூஜைக்கு வா" என்று அழைத் தாள்.

சமாதானம் அடையாத சித்தி, "நான் வரமாட்டேன் அம்மா! அந்த நகைகளுக்கு நான் என்ன பதில் சொல் வேன். உன் கணவன் கேட் டால் என் மானமே போய் விடுமே...எந்த கெட்ட வேளை யில் இங்கு வந்தேனோ. உன் தகப்பனைப் போல் மரியாதை யாக வீட்டிலேயே இருக்காமல் போய்விட்டேனே. என்னை இப் படியே வீட்டுக்கு அனுப்பிவிடு. நான் போய்விடுகிறேன். உன் அரண்மணையில் யார் முகத்தி லும் விழிக்க நான் விரும்ப வில்லை. எல்லோரும் என்னைத்

தூற்றுவார்கள். அம்மா! தாயே! என்னை மன்னித்து ஊருக்கு அனுப்பிடு. உனக்கு புண்ணியம் உண்டு'' என்று கண்ணில் தாரை தாரையாக நீர் வழிய கெஞ்சிக் கேட்டாள்.

உண்மையை வெளிக்கிக் காட்டாமல் ஆனால் பஸ்சாதாபத்துடன் சித்தியை பார்த்த பெண், "பயப்படாதே சித்தி, என் அம்மன் எனக்கு ஒரு குறைவும் வைக்க மாட்டாள். நீ அவளை வந்து மனதார நகைகள் கிடைக்க வேண்டும், உன் குற்றங்களை மன்னிக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்துக்கொள் அதுவே போதும். சிறியவளாகிய நான் யார் உன்னை மன்னிப்பதற்கு. நகைகள் இல்லாவிட்டால் என்ன? என் பூஜையை தாயார் ஏற்றுக்கொள்ள மாட்டாளா? அவளுக்குப் பரிசுத்தமான உள்ளம் தான் வேண்டும். அதைத் தவிர வேறே ஒன்றும் அவள் விரும்புவது இல்லை. நீ என்னிடம் முறை இடுவதை அவளிடம் முறை இடு. உன் மனோபீஷ்டம் சகலமும் நிறைவேறும்'' என்று சொல்லி சித்தியை பலவந்தமாக பூஜை அறைக்கு இழுத்துச் சென்றாள்.

சித்திக்கோ 'ஏதோ ஒரு விதத்தில் நகைகள் கிடைத்து தனக்கு திருடி என்ற அபவாதம் வராமல் இருக்க வேண்டும்' என்ற ஒரே யோசனை இருந்ததால் அம்மனை ப்ரார்த்தித்து கொள்ள அவள் பின்வாங்கவில்லை. மகாலக்ஷ்மியின் சந்நிதியில் உட்கார்ந்துகொண்ட சித்திக்கு கண்களில் நீர் சமுத்திரத்தைப் போல் பொங்கி வந்தது. தன்னை மறந்தாள். மகாலக்ஷ்மியிடம் அவள் மனம் லயித்தது. தான் உதைத்துத் தள்ளிய குற்றங்களையும் நம்பி கொடுத்த நகைகளைத் தொலைத்த குற்றத்தையும் மன்னித்துத் தன்னை காப்பாற்றி ரக்ஷிக்க வேண்டுமென்று வருந்தி வருந்தி கேட்டுக் கொண்டாள். தன்மேல் அபவாதம் வராமல் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று அம்பாளிடம் மன்றாடி வேண்டி ப்ரார்த்தித்தாள். தாயாரின் நிலைமையும் ப்ரார்த்தனையில் லயித்து இருப்பதையும் கண்ட பெண்ணுக்கு ஒரே குதூகலம். அவள் குற்றங்களை மன்னிக்கும்படி தானும் வேண்டிக் கொண்டாள். மிகுந்த பக்தி சிரத்தையுடன் பூஜை முடிந்தது.

முன் ஏற்பாடுடன் ராணி சொல்லி வைத்தது போல் ஒரு வேலைக்காரன் நகை மூட்டையைக் கொண்டுவந்து ராணி இடம் "பெரிய அம்மா ஏதோ பராக்காக இருந்தார்கள், நகைகள் காணாமல் போய் விடுமே என்று நான் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இதோ அம்மா உங்கள் சொத்து'' என்று கொண்டு வந்து கொடுத்துவிட்டான்.

காணாமல் போன நகைகளைப் பார்த்த உடன் சித்திக்கு ஒரே சந்தோஷம். அதை வாங்கி பெண்ணிடம் ஜாக்ரதையாகக் கொடுத்தாள். தன்மேல் யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள் என்று மனதில் ஒரு த்ருப்தி. வ்ரத நியமப்படி சித்தி உபவாசம் இருந்து பூஜை செய்து கொண்டாளே என்று பெண்ணுக்கு சந்தோஷம். தன் அகங்காரத்தை ஒழித்து கருத்துடன் தன்னை பூஜித்தாளே அவளை அநுக்ரஹிக்க

வேண்டுமென்று அம்மனும் தீர்மானித்தாள்.

"அம்மா, சாப்பிட வா" என்று அன்னையை அழைத்து சென்ற ராணி வேண்டிய மட்டும் உபசரித்தாள்.

தன் ஊருக்குப் போக வேண்டுமென்று நினைத்துக் கொண்ட சித்தி மறுநாளே புறப்பட்டாள். குழந்தைக ளெல்லாம் தந்தையைபார்க்கக் குதூகலமாக புறப்பட்டன. சித்திக்கு வேண்டிய மரியாதை களை செய்து அனுப்பினாள் ராணி. ஸ்ரீ மகாலக்ஷ்மிக்குத் திருப்தி ஏற்பட்டதால் அவர்கள் போகும் வழியில் முதல் தடவை கொடுத்த பானை அந்த மூங்கில் மரத்தில் கட்டினது கீழே இறங்கிவந்து இருந்தது. காடு வழி ஆன தால் அதை யாரும் பார்த்து எடுத்துக் கொள்ளவில்லை. தான் கட்டிவிட்டுப் போன மரம் இதுதான் என்று பார்த்த அந்தப் பையன் அது எட்டும் தூரத்தில் இருந்ததால் எடுத் துப் பார்த்தான். சாதமெல் லாம் உலர்ந்து போய் பணம் நன்ருக கண்ணுக்குத் தென் பட்டது.

இன்னும் கொஞ்ச தூரம் போனவுடன் இரண்டாவது பையனைப் பார்த்த பூஷணிக் காய் வாங்கிக் கொண்டவன் "அப்பா குழந்தை உன்னுடை யது திருட்டு சொத்து என்று சொல்லி நான் எடுத் துக்கொண்டு போனது தவறு. ராணி இடம் காண் பித்தேன். தானே கொடுத்த தாகச் சொல்லி மிக்க வருத் தப்பட்டார்கள். இதோ உன் னுடைய சொத்து' என்று இரண்டையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டான்.

தடியும், மேல் போர்வையும் எடுத்துக்கொண்ட ஆசாமியும் இவர்கள் வரும் அரண்மனை வண்டியைபார்த்தஉடன் "இந் தக் கோலும் போர்வையும் என்னுடையது அல்ல; அரச ரிடம் போனல் எனக்கு தண் டனை கிடைக்கும். இதை எப் படியாவது அரண்மனையில் சேர்த்து விடுங்கள் என்று கொடுத்துவிட்டு மறைந்தான்.

ஒவ்வொன்றிலும் அவள் பெண் பணம் வைத்து அனுப் பி இருந்ததையும் தன் கெட்ட வேளை ஒன்றும் தனக்கு வந்து சேராததையும் நினைத்து ஆச் சர்யப்பட்டாள் சித்தி. இதைப் பார்க்கப் பார்க்கத்தான் அம் மனை உதைத்துத் தள்ளியது தப்பு; அம்பாள் தயவு இல்லா மல் ஒரு காரியமும் சாத்ய மில்லை. இன்றுடன் என் அகம்பாவம் ஒழிந்தது என்று மனதில் மகாலக்ஷ்மியின் கரு ணையையும் கடாக்ஷத்தையும் த்யானித்துக் கொண்டாள்.

வீட்டுக்கு வந்து சேர்ந்த சித்தி, தன் கணவனிடம் நடந் ததெல்லாம் சொல்லி, தன் பெண்ணின் குணங்களை வியந் து கொண்டாடினாள், பணத் தின் பலத்தாலும் நல்ல ஆகா ரத்தின் பலத்தாலும் அரச ருக்கு நன்ருக உடம்பும் மன மும் தேறிற்று. கிழவனின் நல்ல குணங்கள் தெரிந்திருந்த அநேகர் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். இவர்கள் உதவியாலும், தன் மாப்பிள்ளையின் உதவியாலும் தான் இழந்து இருந்த ராஜ்யத் தை மீண்டும் பெற்றார். அம்ம னின் அனுக்ரஹம் கிடைத்த உடன் சகல சம்பத்தும் கிடைத்து சுகமாக வாழ்ந்தார் கள்.

இந்த வ்ரதத்தை தெலுங்கர்களும் பார்வதியாக அம்மனை மனதில் த்யானித்து பூஜை செய்கிறார்கள். பக்தி ச்ரத்தையுடன் செய்யும் எல்லோருக்கும் மனோபீஷ்டம் நிறைவேறும். முதல் முதல் வெறும் அவரக் கொடியின் கீழ்தான் ராஜகுமாரியால் ஆரம்பிக்கப் பட்டதால் அவரைகொடியையும் பூவும் வைத்து மஞ்சளால் அம்மனை செய்துதான் பூஜை செய்ய வேண்டும். இதற்கு வ்ரதம் முடியும் வரையில் உபவாசம் இருந்து பூஜிப்பதுதான் மிக முக்யம்.

அம்மகாலக்ஷ்மியின் அனுக்ரஹம் சகலருக்கும் கிடைக்கட்டும்.

சர்வேஜனோ சுகினோ பவந்து
சமஸ்த மங்களம் சித்தி ரஸ்து.

சுபம்

டில்லி நர்சிங் கல்லூரியில் பயிற்சி பெற்றுவருகிற ஒரு நர்ஸ்

பின்னணி

இசை மண்டலம்

பி. வி. ஜெயராமன்

இசை மன்னன் ஸ்ரீ T. M. சௌந்தரராஜன் அவர்கள், தமிழ் நாடும், தமிழ் மொழியும் செய்த தவப் பயனுய் 1923-ம் ஆண்டு மார்ச் மாதம், 24-ம் தேதி, தண்டமிழ் மணங் கமழ்ந்து, சான்றேர் பலர் அவதரித்து, சங்கம் வளர்த்த, மதுரைமா நகரிலே பிறந்தார். இவரது தந்தையாரின் பெயர்—மீனுட்சி அய்யங்கார், தாயார் — வேங்கட அம்மாள்; அவர்கள் அன்பும், அருமையும், பக்தியும், பண்பாடும், ஒருங்கமைந்த புண்ணியவதி என்று அவர் சொல்லக் கேட்டேன். ஸ்ரீ சௌந்தரராஜன் மூன்று சகோதரர்களுடனும், இரண்டு சகோதரிகளுடனும் பிறந்தவர்.

இவர் சங்கீதப் பரம்பரையில் தோன்றியவர். இவரது தந்தையார் சிறந்த வித்வான்; இவரது குடும்பம் தொன்மையான பண்பாடு நிறைந்த குடும்பம். வழி வழியே வந்த கல்விச் செல்வமும், இசைச் செல்வமும், குறைவறப் பெருகிய குடும்பம். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுடைய பிரதம சிஷ்யர்—வாலாஜா பேட்டை வெங்கட்டரமண பாகவதர்; அவர்கள் பரம்பரை வாயிலாக வந்த ஸ்ரீ ராமசாமி பாகவதர் அவர்களின் பிரதம சீடர் என்னுடைய தந்தையார்—என்று பெருமையோடு கூறி, அவரிடம்தான் நான் சங்கீதம் கற்றுக் கொண்டேன் என்றுர்; இவர் முறைப்படி மூன்று ஆண்டுகள் "குருகுல வாச முறையில்" சங்கீதம் பயின்றவர். இவர் கர்நாடக சங்கீதத்தில் கரை கண்டவர். அதாவது அடியோடு கர்நாடக சங்கீத முறையைப் பயின்று, சபையில் பாட அமர்ந்தால், கர்நாடக சங்கீதத்தில் யாருக்கும் நிகராகப் பாட வல்லமை பெற்றவர். இவர் பூச்சி ஸ்ரீ சினுவாச அய்யங்கார் அவர்களுடைய மருமகனும், சிஷ்யருமான, காரைக்குடி ஸ்ரீ ராஜாமணி அய்யங்கார் அவர்களிடம் இரண்டு ஆண்டுகள் முறையான கர்நாடக சங்கீதம் பயின்று மற்றும் பல வித்வான்களிடமும் சங்கீதம் கற்று, மிகுந்த திறமை பெற்றவர். சாஸ்த்ரீயமான சங்கீதத்தில் தேற்சி பெற்ற மேதை.

இவர் 1942-லிருந்து ரேடியோவில் பாடிவந்தார். ஆனல் சென்ற இரண்டாண்டு காலமாகப் பாடுவதில்லை; காரணம்

அகில இந்திய ரேடியோவில் "முழு நேரக் கச்சேரி" என்று $1\frac{1}{4}$ மணி நேரம் பாட, ஒரு வாய்ப்புக் கொடுக்கின்றார்கள். அந்த வாய்ப்பு சாதாரணமாக எல்லோருக்கும் கிடைப்பது அரிது. குறிப்பிட்ட ஒரு சிலருக்கு — அதாவது நல்ல தேர்ச்சி பெற்றவர்களுக்குத்தான் அவ் வாய்ப்பு கிடைக்கும். அந்த உரிமையைத் தானும் கேட்கவே அகில இந்திய ரேடியோக்காரர்கள் மறுத்து விட்டார்களாம். எனவே, தன் இசையைக் கேட்க, பல்லாயிரக் கணக்கான மக்கள், மணிக் கணக்கில் காத்திருக்க, தனக்குப் பாட $\frac{1}{4}$ மணியும் $\frac{1}{2}$ மணியும் சந்தர்ப்பம் கொடுத்தால் — அதனால் நாட்டுக்கும், மக்களுக்கும் யாதொரு பயனும் இல்லை; நன்மையும் கிடையாது; அப்படிப் பாடி, மக்களை அரைகுறை ஆனந்தத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை; இலவசமாக, ஊர் ஊராகச் சென்று, பாடி, மக்களை மகிழ்விக்கத் தன்னால் முடியவில்லை; நேரமும் இல்லை; சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஒத்து வரவில்லை என்று வருந்தி, இப்படியாவது, ரேடியோவில் $1\frac{1}{4}$ மணி நேரம் இசை முழக்கம் செய்து தமிழ் மக்களின் இதயமும் செவியும் குளிர்ந்து நல்ல கீதத்தைக் கேட்டு பயனடையட்டும் என்று நினைத்தால், இந்த ஒரு சிறு சந்தர்ப்பம் கூட கொடுக்க அவர்களால் முடியவில்லையே என்று வேதனைப்பட்டு, எதிர் காலத்திலாவது இந்நிலையைப் போக்க, அவர்களுக்கு உணர்த்த, தானும் தன்னைப் போன்றவர்களும், மக்களை அரைகுறை ஆனந்தத்தில் ஆழ்த்தக் கூடாது என்று விரும்பி, அதற்கு முதல்வராகத் தானே, ரேடியோவில் பாடுவதிலிருந்து நிறுத்திக் கொண்டு, ஒதுங்கி விட்டேன் என்றார். இதைக் கூறும் பொழுது அவர் அடைந்த மன வருத்தத்தை எப்படி விவரிப்பதென்றே எனக்கு விளங்கவில்லை. எதிர் காலத்திலாவது இக் குறையைப் போக்க அரசாங்கமாவது; ஆல் இந்தியா ரேடியோக்காரர்களாவது, ஆவன செய்ய வேண்டும்.

இவர் வாழ்க்கையின் ஆரம்பமே விசித்திரமானது. இவர் "ராயல் டாக்கீஸார்" தயாரித்த "சுதர்சனம்" என்ற படத்தில் நடிப்பதற்காகச் சென்றவர்; பிரபல திரைப்பட நடிகர் P. B. ரங்காச்சாரியாரின் சிஷ்யராக ஒரு சிறு வேடம் தரித்து விட்டு, அதன், பின்பு பிரபல சினிமா டைரக்டர் "ஸ்ரீ சுந்தர் ராவ் நட்கர்ணி" அவர்களின் சிபார்சின் பேரில், முதன் முதலாக 1945-ல் "ஜூபிடர் பிக்சர்ஸின்"—"கிருஷ்ண விஜயம்" என்ற படத்தில் நடிகர் ஸ்ரீ P. V. நரசிம்ம பாரதி அவர்களுக்காகப் பின்னணியில் பாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். பின்பு தொடர்ச்சியாக "மார்டன் தியேட்டர்"ஸில் 4, 5, படங்களுக்குப் பாடும் வாய்ப்பு கிடைக்கவே, அதில் மந்திரி குமாரிக்காக "அன்னம் இட்ட வீட்டிலே" என்ற பாட்டு மிகவும் செல்வாக்கைப் பெற்று, ரசிகர்களின் மனதைக் கவரவே, தான் சிறந்த பின்னணிப் பாடகன் என்பதை மக்கள் மனதில் தன்னைப் பதிய வைத்துக் கொண்டார். பிறகு 1954-ம் ஆண்டு சென்னை வந்து ஆறு மாதம் பல படக்கம்பெனிகளில் ஏறி இறங்கியும், யாரும் தன்னை

உபயோகப் படுத்திக் கொள்ள முன் வாராததால், அதன் விளைவு—வாழ்க்கை வெறுத்து விடவே, ஊருக்குப் போய் விடுவதே மேல் என்று நினைத்திருந்த சமயத்தில் A. V. M.-ன் மியூஸிக் டைரக்டர் ஸ்ரீ சுதர்சனம் அவர்கள் அவருக்கு தைரியம் கொடுத்து, ஊக்கப்படுத்தி, வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டிய வழிகளைச் சொல்லிக் கொடுத்ததோடு, A. V. M.-ன் "செல்லப்பிள்ளை" என்ற படத்தில் பாடவும்,ஒரு சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்தார். தனக்கு' 'செல்லப் பிள்ளை'' தான் ஒரு வழிகாட்டி என உருக்கத்தோடு கூறி, தனது திறமையை நன்கு தெரிந்து கொண்டு தன்னை ஊக்குவித்து முன்னுக்குக் கொண்டு வந்தவர் அவர்தான் என்றார்.

பின்பு, பல எதிர்ப்புகளுக்கிடையில், கவிஞர் மருதகாசியின் முயற்சியாலும், அருணா பிலிம்ஸ் அதிபர் ஸ்ரீ கிருஷ்ணசாமி அவர்கள், மியூஸிக் டைரக்டர் ஸ்ரீ ஜி. ராமநாதன் அவர்களின் சிபார்சின் பேரில், தனது படமாகிய"தூக்குத் தூக்கி" யில் முதன் முதலாக நடிகர் திலகம் ஸ்ரீ சிவாஜி கணேசன் அவர்களுக்காக பின்னணியில் பாடும் வாய்ப்பை அளிக்கவே, அவரது பாட்டு பல லட்சக் கணக்கான ரசிகர்களின் உள்ளங்களிலே நிலைத்து நின்று, எதிர்கால இன்பத் தமிழகத்திலே அவர் ஏறு நடை போட, வழி காட்டிற்று. அன்றிலிருந்து அவரது பெயருக்கும், பாடலுக்கும், மதிப்பும், மவுசும் ஏற்பட்டன. அன்று முதல், வெற்றிப் பாதையிலே பல மைல் கற்களைக் கடந்து,இன்று வரை மங்காத புகழுடன்,வாழ்க்கைச் சக்கரம் உருண்டு கொண்டே இருக்கின்றது. இன்று சென்னையிலே, இந்த பங்களாவில், நல்லோர் தன்னைப் போற்றும்படியாக வாழ்ந்து வருகின்றேன் என்றால், அதற்கு முக்கிய காரணம் A.V. M-ன் ஸ்ரீ சுதர்சனம் அவர்களும், கவிஞர் மருதகாசி, அருணா பிலிம்ஸ் அதிபர் கிருஷ்ணசாமி, மியூஸிக் டைரக்டர் ஜி. ராமநாதன் அவர்களும்தான் என்று மிக நன்றி உணர்ச்சியோடும், பெருமையோடும் கூறினார். தன்னைத் தரையில் இருந்து திரை மறை வரை உயர்த்தியவர்கள் அவர்கள் தான் என்று அவர் உணர்ச்சியோடு கூறுகையில் அவரது நன்றி உணர்ச்சியையும், பெருந் தன்மையையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இவருக்குப் பக்திப் பாடல்களில் விருப்பம் அதிகம். "முருகா நீ வரவேண்டும்", "கந்தா உனை அன்றி", "சங்கம் முழங்கும்" ஆகிய பாடல்கள் உளம் பூர்வமாகப் பாடியவைகள் என்றும் அழியாமல் சிரஞ்சீவியாக உள்ள பாடல்கள் என்று பெருமிதத்தோடு கூறுவதைக் கண்டேன்.

இவர் பாடியிருக்கும் படங்களில் இவரது எண்ணப்படி, மிகவும் சிறப்பாக அமைந்த படங்கள் "நான்பெற்ற செல்வம், அம்பிகாபதி, பதிபக்தி" என்று இவர் தனியாகப் பிரித்துச் சொல்லாவிட்டாலும், இவரிடம் பேசியதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

சினிமாவில் இவரால் பாடப்பட்டு, இவருக்கென மக்கள் தங்கள் மனதில் தனி இடம் ஒதுக்கி, இவருக்கு மங்காத

புகழை உண்டாக்கிய பாட்டுக்களில் சில:—

"நான்பெற்ற செல்வம்"
—நான்பெற்ற செல்வம்

"சத்தியமே லட்சியமாய்"
—நீலமலைத் திருடன்

"நட்டா ராஜா நடடா"
—செங்கோட்டை சிங்கம்

"சித்திரம் பேசுதடி"
—சபாஷ் மீனு

இவருக்குM. K. T. பாகவதர் கச்சேரி என்ருல், இளமையிலிருந்தே, யோகம் உண்டு. எங்கு நடந்தாலும் சென்று கேட்கத் தவற மாட்டாராம். அவர் மூலமாக, பாடகருக்கு சாரீரம்தான் முக்யம் என்பதை கற்றுக் கொண்டேன் என்ருர். தெருக்கூத்து எங்கு நடந்தாலும் சென்று வரும் பழக்கமும் உண்டாம். இளமையில் அவர்கள் ஆசையோடு பார்த்து அனுபவித்த தெருக் கூத்தும், கேட்டு அனுபவித்த சங்கீதமும்தான் அவருடைய வருங்கால வளர்ச்சிக்கு எத்தனையோ உதவிகள் செய்தன என்ருர்.

இவர் 1946-ம் ஆண்டு சுமுத்திரா தேவியாரைத் திருமணம் செய்து கொண்டார். தற்சமயம், சித்திரலேகா, சந்திரிகா, பாலசுப்பிரமணியன், மல்லிகா, பால்ராஜன், செல்வக்குமாரன் ஆகிய மக்கட் செல்வங்கள் உள்ளன. இவரது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று நிகழ்ந்ததாம். அதாவது இவர், மாடர்ன் தியேட்டர்ஸில் "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்ற பாட்டை பாடிக் கொண்டிருக்கையில் இவரது ஏழாவது திருமகன் இறந்தான் என்ற செய்தி வந்ததுதான். அந்த வருத்த உணர்ச்சியிலேயே அப்பாட்டை பாடிவிட்டு வந்தேன்; இது என் வாழ்க்கையிலேயே என்றென்றும் மறக்க முடியாதசம்பவம் என்று உருக்கத்தோடு கூறினுர்.

இவர் இதுவரை 185 படங்கவில் பாடியிருப்பதுடன், மேலும் தற்சமயம் 35 படங்களில் பாட ஒப்புக்கொண்டிருக்கிருர்.

இவர் கலைக்காக கல்வியையும் அலட்சியம் செய்து விடவில்லை. இவர் மதுரையில் தனது அருமை நண்பர் C. L. கிருஷ்ண மூர்த்தி என்பவர் இளமையில் இறந்து விடவே, அவரது நினைவாக, "C. L. கிருஷ்ணமூர்த்தி இலவச இந்தி பாடசாலை" என்று ஒன்று துவக்கி, அதற்குத் தானே ஓராண்டு ஆசிரியராக இருந்து பணியாற்றி—1946-ல், தற்சமயம் அது நல்ல முறையில், சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றது என்று கூறி,நான் நினைத்ததைவிட இன்னும் ஒரு படி மேலாகவே சென்று விட்டார். இவர் S. S. L. C. வரை பயின்று, நாடகப் பயித்தியம் காரணமாக, அதில் செலக்ஷன் ஆகாது போகவே, அதற்கு அத்துடன் ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்; பின் 'டைப்ரைட்டிங்' பாஸ் செய்ததோடு, இந்தியில் 'ராஷ்டிர பாஷா' பரீட்சையும் பாஸ் செய்திருக்கிருர்.

இவருக்கு ஸ்ரீ முருகப் பெருமானிடம் மிகவும் பக்தி உண்டு. எல்லாம் அவன் செயல் என்கிற உறுதியான நம்பிக்கையை உள்ளத்திலே கொண்டிருக்கின்ருர்.

ஸ்ரீ சௌந்தரராஜன் அவர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து அவரது குணங்களை நன்கு அறிய முடிந்தது. அவர் பேசுகின்ற போது எவ்வளவு ஆழ்ந்த கருத்துள்ள பேச்சுக்களைப் பேசுகின்ருர் என்பதைக் கண்டேன். அவர் பழமையை மறந்து விடாமல், கடமையையும் கைவிட்டு விடாமல், கிடைத்த வாய்ப்பையும் விட்டு விடாது, இன்று முன்னுக்கு வந்து, தலை நிமிர்ந்து நிற்கின்ற பண்பு என்னைக் கவர்ந்தது.

கடைசியில் மோகினியின் வாசகர்களுக்கு ஏதாவது செய்திகூறக் கேட்டதற்கு, இன்றும் போல் என்றும் உங்கள் மோகினி சீறும் சிறப்புமாக வெளி வந்து, நாட்டுக்கு நல்லது செய்வதோடு, கலைக்காகப் பாடுபடுகின்ற எங்களைப் போன்ற கலைஞர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டும் என்று கூறி, மோகினியின் வாசகர்களுக்கு தனது இதயங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக அவரைப் பற்றி: நல்ல குணமும், அடக்க ஒழுக்கமும், உயர்ந்த பண்பாடும் போன்ற எல்லா நற்பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்று, தியாக சீலராக வாழ்ந்து வருகின்ற இவர் எப்பொழுதும் சிந்தனையோடு சிரித்துச் சிரித்துப் பேசுகிருர். பழகுவதற்குத் தங்கமானவர். "இது நம்ம சீசன், யாரும் அசைக்க முடியாது" என்ற இறுமாப்பில் இல்லாது, வாழ்க்கை வாழ்வதற்கே என்று கொள்ளாது, கலையையும் பெரிதென மதித்து வாழ்ந்து வரும் இவர், நாட்டுக்கும்: கலைக்கும், மேன் மேலும் தொண்டு புரிய வேண்டும்; மார்க்கெட்டில் நல்ல கிராக்கியுடன் இன்றும் போல் என்றும் புகழ்பெற்றுவிளங்கவேண்டும்; அதற்கு எல்லாம் வல்ல இறைவன் வேண்டியன கொடுக்க வேண்டும் என்று அவரோடு நாமும் மோகினியின் சார்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது போன்று, நான் சென்று பேட்டி கண்ட போது, அன்போடு வரவேற்று, பண்போடு பதில் கொடுத்து, இரண்டு பாட்டுக்கள் பாடியும் காண்பித்து, என்னை அறியாது என் உள்ளத்தை அவரிடம் பறி கொடுத்து விடும் அளவுக்குப் பேசி பழகியதற்கு அவருக்கு நானும், எங்கள் மோகினியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, அலுப்பும், துன்பமும் நிறைந்த இந்த நாட்டில், உங்களது கீதத்தின் மூலம் மகிழ்ச்சியும், உற்சாகமும் ஊட்டுவதே உங்களுடைய பணியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்,

✽

விரல்

●

"சார் நீங்கள் அப்படி சொல்லக் கூடாது. கையில் என்ன இருந்தாலும்... கொடுத்தால்... தேவலை"...

"இதோ பாருங்கோ கையிலே விரல் இருக்கு... விரல்லே நகம் இருக்கு... நான் பெண்ணுய் இருந்தால் நகத்தில் மருதாணியோ... சேப்பு சாயமோ இருக்கும்".

மூன்று

வேதனையும்—விசாரணையும்

சங்கரன் சோபாவிலிருந்து குதித்தெழுந்தார். தன்னை மணியடித்து கிளப்பிய போனை எடுத்து பேசினார்.

பேச்சு முடிந்ததும் "அட! இதென்ன, அடுக்கடுக்காக 'போன் கால்' வந்துகொண்டேயிருக்கிறதே? நல்ல திருட்டுதான் நடந்தது நம் வீட்டில்" என்று அவர் உரக்கவே கூறிக்கொண்டார். 'சரி, முதலில் இவ்விஷயத்தை அனுஷாவிற்கும், அவள் தாயாருக்கும் கூற வேண்டும். மனதார சந்தோஷப் படக்கூடியவர்கள்' என்றெண்ணிய சங்கரன், எதிர்பாராது உண்டாகிய மகிழ்ச்சியில் தெம்புடன் கீழிறங்கினார்.

"அனுஷா! அனுஷா!" என்றழைத்த அவர் குரலுக்கு, மறுபுறத்திலிருந்து, அவள் துள்ளியவாறு ஓடிவரவில்லை. அவளுக்குப் பதிலாக அவள் தாயாரே வெளியே வந்தாள்.

"மாமா! அனுஷா...என்னவோ போல் உட்கார்ந்திருக்கிறாள். சரியாக முகம் கொடுத்து பேசாமல் கவலையே உருவாய் இருக்கிறாள். அவள் முகத்தில் ஏற்பட்டுள்ள மாறுதலைப் பார்த்தால் எந்த நிமிஷமும் அழுதுவிடுவாள் போல் இருக்கிறது. இன்று அவள் கல்லூரியில் பேச்சுப் போட்டி உண்டு. ஒவ்வொரு தடவையும் குஷியோடு சென்று வெளுத்து வாங்கும் அவள் இன்று போகப் போவதில்லையாம். என்னவோ முரண்டு பிடிக்கிறாள். காரணமே தெரியவில்லை" என்றாள்.

மனதிற்குள்ளேயே சிரித்தவாறு 'நல்ல பெண் இந்த அனுஷா' என்றவாறு உள்ளே சென்றார். "என்னம்மா அனுஷா! ஏன் இப்படி கவலையாய் இருக்கிறாய்? இன்ஸ்பெக்டர் ரவீந்திரனின் திறமையில் சொத்தெல்லாம் கட்டாயம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை என் நெஞ்சில் ஏற்பட்டது வீண் போகவில்லை. நம் சொத்தில் முக்கால் பாகம் கிடைத்துவிட்டதாம்... அசோகன் ஜுவல்லரி முதலாளியை கைது செய்திருக்கிறார்களாம். அவன்

கடை இரும்புப் பெட்டியில் இந்த நகைகள் இருந்ததை நம் வீட்டிலிருந்து சென்ற துப்பறியும் நாய்தான் கண்டுபிடித்த தாம்...என்ன வேடிக்கைப் பார்த்தாயாம்மா...ஏனம்மா கவலைப் படுகிறாய்? எனக்குத் தைரியம் சொல்லியவளாயிற்றே நீ?''

"என்ன! சொத்தெல்லாம் கிடைத்துவிட்டதா? சேட் அசோக் கையா கைது செய்திருக்கிறார்கள்? துப்பறியும் நாய் கண்டு பிடித்ததா?'' என்று குழம்பியவாறு படபடத்தாள் அனுஷா.



''ஆமாம்! அனுஷா...ஊரில் எல்லோரும் பேசிக் கொள்கிறார் களாம். தவிர எனக்கு போன் மேல் போன் இது விஷயம் பற்றி வந்துகொண்டே யிருக்கிறது. அசோக் கண்ணியமான வியாபாரி, அவரை ஏன் கைது செய்தார்கள் என்று பெரிய மனிதர்களெல்லாம் என்னைக் கேட்டார்கள். எனக்கும் பெருங் குழப்பமாக இருக்கிறது. ஒரு நிரபராதியின் வாழ்வு நம் வீட்டு திருட்டினால் பாழாகலாமா? இன்ஸ்பெக்டரிடம் இதைப்பற்றி

விசாரிக்க வேண்டும்...நீ என்னம்மா சொல்கிருய்...இரண்டு மாதத்திற்கு முன்பு கூட ஒரு தங்க நெக்லேஸ் கமலாவிற்கு அந்தக் கடையில்தானே வாங்கினேம்...நீ கூட கடைக்கு வந்திருந்தாயே...'' என்று சங்கரன் பேசிக்கொண்டே போனர். ஆனல் அனுஷாவின் வாயோ அடைத்துவிட்டது போன்ற திக்பிரமை ஏற்பட்டு அத்தாக்குதலினல் மௌனியாயிருந்தாள்.

பிறகு தன்னை சமாளித்துக் கொண்டாள். "அசோகன் மிக பெருந்தன்மையான, அனுபவம் மிகுந்த வியாபாரி. இவ்வூரிலேயே வருஷக் கணக்காக இருப்பவர்...அவரா கைதி. அவர் கடையிலா நகைகள்...அப்படியானல்...அப்படியானல்...நான்... என்..."

"என்ன அனுஷா! என் உன் முகம் இப்படி மாறுகிறது. நீ...உன்...என்ன?...நீ வேறு ஏதாவது நினைத்தாயா?"

அப்போதுதான் அனுஷாவின் மனதில் 'சுரீர்' என்றது. 'ஐயோ! மனக்கிளர்ச்சியின் வேகத்தில்—பலவீனத்தில் உளறிவிட்டேனே. தாத்தாவுக்கு என்ன சொல்வேன்? சொத்தெல்லாம் கிடைத்துவிட்டது என்பதைக் கூறி என் கவலையைத் தீர்க்க ஆவலாய் ஓடிவந்த இந்தக் கிழவருக்கு, இந்தத் திடுக்கிடும் செய்தியைக் கூறுவதா? கூறினல்...என்மீது இருக்கும் அன்பு அறுந்துபோகுமே!...பல நாளாய் ஊறி உரம் பெற்றுள்ள நட்புக்கு இவ் வார்த்தைக் கோடாரிக் காம்பாகவல்லவா ஆகிவிடும். அவரது விசாலமான மனதின் முன்பு நான் தூசியாகவன்றே வெறுக்கப்படுவேன்.

அசோக் சேட் எப்படி கைதியாகிப் போனரோ...அப்படித்தானே ஒரு நாள் என்னையும் விலங்கைப்பூட்டி போலீஸ் வண்டியில் இழுத்துச் செல்வார்கள்...இந்த அபாண்ட பழியை—என் மானத்தையே மடிக்கும் விஷயத்தை எத்தனை நாழி மனதில் வைத்துக்கொண்டு குமுறுவது? ஐயோ! ஆண்டவனே எனக்கு வழி சொல்லேன்...நடந்ததைக் கூறிவிடலாமா? என் மனிதர்களாகிய இவர்களிடம் கூறுவதில் என்ன தவறு?...சரி, என்ன நேரிட்டாலும் பொறுக்க வேண்டியது என் விதியாய் இருந்தால்...' இவ்வாறு குழம்பி உருகியது அவள் நெஞ்சம். நாம் விவரிக்கும்போது விசாலமாக இருந்தாலும் இவ்வத்தனை உணர்ச்சிகளும், கேள்விகளும் அவள் உள்ளத்தில் சில விநாடி நேரத்தில் எழுந்து மறைந்தது.

சிந்தனையைத் திருப்பிய அனுஷா, "அது...அதில்லை தாத்தா...நான்...என்......" என்று ஆரம்பித்து தொண்டையடைக்க நிறுத்திவிட்டாள்.

"தாத்தா...தாத்தா......இன்ஸ்பெக்டர்...என்னைத் தனியே பேசக் கூப்பிட்டாரே...அவர்...அவர்...என்னைக் குற்ற...ஐயோ தாத்தா! என்னைக் குற்றவாளியாகச் சந்தேகிக்கிருர்..."

"என்ன?...என்ன சொன்னாய். நீ...உன்னையா குற்றவாளியாய்..." என்று மேலே கூறமுடியாமல் திணறினார் சங்கரன்.

"ஹூம்..." என்ற அனுஷா தலைகுனிந்தாள். "ஆமாம் தாத்தா! துப்பறியும் நாய் ஒரு கத்தைப் பணத்தைக்...கவ்வி வந்ததே...அது...அது...அந்தக் கைகுட்டை என்னுடையது... அத..."

"அனுஷா! உன் கைக்குட்டையா?......அதில் என் பணமா?..." சங்கரனின் தலை கிறுகிறுத்தது.

சங்கரனின் தடுமாற்றத்தைக் கண்டதும் அனுஷாவின் குடலே கிடுகிடுக்கத் தொடங்கியது. 'ஐயோ! தாத்தாவும் என்னைச் சந்தேகித்து விட்டாரா...குழந்தை முதல் அவர் இல்லத்திலேயே வளரும் என்னுடைய குணம் அவருக்குத் தெரியாதா?'

"தாத்தா! எல்லாம் ஒரே மர்மமாய் இருக்கிறது. நான் நிரபராதி...தாத்தா! என் கைக்குட்டை அங்கு எப்படி வந்தது என்பதே புரியவில்லை. சலனமில்லாது நிர்மல நீரோடைப்போல் ஓடிக்கொண்டிருந்த என் வாழ்க்கையில் சூறுவளி போன்ற இந்த எதிர்பாராத அபாண்ட பழி என் உயிரை அணு அணுவாய் சித்திரவதை செய்கிறது. தாத்தா! கனவிலும் பிறருக்கொரு தீமை செய்ய எண்ணாத நான், என் வீட்டிலேயே திருடுவேனா?... உண்ட வீட்டிற்கு இரண்டகம் தேடுவேனா? எனக்கு என்ன சோதனைக் காலமோ? என் கைக்குட்டையில் பணமிருந்ததையும் இன்ஸ்பெக்டரின் சந்தேக வார்த்தையும் இப்போது நினைத்துப் பார்த்தாலும், என் உடலெல்லாம் நெருப்பாக தகிக்கிறது.

மேலும், ஊரிலேயே பொதுவாக நல்ல பெயரும், உயர்ந்த குணமும், சிறந்த வியாபாரியும், தங்கள் குடும்ப நண்பருமான அசோக் உங்கள் வீட்டில் திருடுவாரா...நான் நம்பவேயில்லை. தாத்தா...எதிர்பாராத அதிர்ச்சியினால், என் மனவருத்தத்தினால்...என்னையுமறியாது படபடத்துவிட்டேன். மன்னியுங்கள். தாத்தா! இதில் ஏதாவது சூழ்ச்சியிருக்குமோ என்றே எனக்குத் தோன்றுகிறது. தாத்தா நான் நிரபராதி....உண்மையில் நிரபராதி...நீங்களும் என்னைச் சந்தேகிக்கிறீர்களா?"

"சீ பைத்தியமே! நான் உன்னைச் சந்தேகிப்பேனா...பெற்ற தகப்பனுக்கு தன் குழந்தைமேல் சந்தேகம் வருமா?...அனுஷா! நீ என் சொந்த குழந்தைக்கும் மேலானவள், உனக்கு சூழ்ச்சி என்று தோன்றுகிறது அனுஷா. இது சூழ்ச்சியன்றி வேறொன்றும் இல்லை என்றே என் மனதில் படுகிறது. இவ்விஷயம் ஊர் பரவுவதற்குள் நான் இப்போதே இன்ஸ்பெக்டரைச் சந்தித்து அசோகன் பற்றியும் விசாரித்து சிக்கலைத் தீர்க்கவேண்டுகிறேன். கவலையை விட்டு உன் வேலையைக் கவனியம்மா" என்ற சங்கரன் சிறிதும் தாமதமின்றி வெளியே புறப்பட்டார்.

அனுஷாவின் உடல் ஒருமுறை சிலிர்த்து ஓய்ந்தது. சங்கரனை நிமிர்ந்து நோக்கிய அவள் விழிகளில் நன்றி பெருக்கெடுத்தோடியது. என் கைக்குட்டையாயிருந்தும் என்னைச் சந்தேகிக்காது, எனக்காகவே வக்காலத்து பேசவும் செல்கிறாரே! மனிதரா இவர்?... இல்லவே இல்லை. உண்மையில்... தெய்வம்... கலிகால தெய்வம்தான். ஆண்டவனே! நற்குணமே உருவெடுத்துள்ள இந்த வள்ளலின் சொத்தெல்லாம் மீதியும் கிடைத்து, அசோகனின் விஷயமும் தெளிவாக்கப்பட்டு, உண்மைக் குற்றவாளியும் அகப்பட்டு, நான் நிரபராதி என்பது வெட்ட வெளிச்சமாகும் காலத்தைக் கூடிய விரைவில் கொணர்ந்து மனதிற்கு சாந்தியைக் கொடுப்பாயா?' என்று தன்னிலை மறந்து வேண்டத் தொடங்கினாள்.

நகைவியாபாரி அசோகனைக் கைது செய்து கொண்டு ஜீப்பில் கிளம்பிய இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்ததும் தன் அறைக்கு விரைந்தார்.

அசோக் ஒரு குற்றவாளி என சந்தேகிக்கப் பட்டிருந்தாலும், முழு விவரமும் தெரியவில்லை. குற்றம் ருசு ஆகும்வரை அவரை தக்க முறையில் நடத்தவேண்டும், மேலும் குற்றவாளிகளின் அந்தஸ்திற்கேற்ப விசாரிக்க வேண்டும் என்று தொழில் முறையில் கரைகண்ட ரவீந்திரன் அசோகனை ஒரு நாற்காலியில் அமரச்செய்தார்.

மேற்கொண்டு விஷயங்களைக் கூற மாகாண அதிகாரிக்கு போன் செய்ததில் அவர் அங்கு இல்லாததை அறிந்த ரவீந்திரன் மற்ற விஷயங்களைச் சேகரிப்பதில் முனைந்தார்.

"மிஸ்டர் அசோக்! இந்த நகைகளெல்லாம் எப்படி தங்கள் கடையில் வந்தன? மீதி காணுமல் மறைந்துள்ள நகைகள் எங்கே? என்பதெல்லாம் மறைக்காது கூறிவிட்டால், உங்களுக்கு ஏற்படும் தண்டனையில் சிறிது குறையும். இவ்வளவு பெரிய பெயருள்ள நீங்கள் விஷயத்தை மறைத்து ஊரிலே அவப் பெயரைத்தான் வாங்கமுடியுமே தவிர, வேறென்ன லாபம்?"

"ஆ!... இன்ஸ்பெக்டர்ஸார்! மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட உயிரை வாட்டும் கேள்விகளைக் கேட்டு என்னை துன்புறுத்துகிறீர்களே... என் ப்ரத்யக்ஷ தெய்வத்தின் சாட்சியாக இதை நான் செய்யவே இல்லை. இப்படிப்பட்ட அயோக்யத்தனமான செய்கையை மனத்திலும் நினைத்ததில்லை. நான் நிரபராதி ஸார்... நான் நிரபராதி..."

"ஸார்! உங்கள் கடையில் கண்கூடாக நகைகளைக் கண்டெடுத்திருக்கையில் உங்களைக் குற்றவாளியாக்க வேறு சாட்சியே அவச்யமில்லை. அப்படியிருக்கையில் நீங்கள் நிரபராதி என்றால்? ஏன் சார்! அப்போது உங்கள் விரோதிகள் யாராவது செய்திருப்பார்கள்... என்று தோன்றுகிறதா? அப்படியானல் யார் மீது உங்களுக்குச் சந்தேகம்?"

"அப்படியும் இருக்கலாம்...என்னை அவமானப் படுத்த, என் குடும்ப கௌரவத்தைக் குலைக்க, என் வியாபார முன்னேற்றத்தைக் கண்டு பொருமை கொண்டு செய்திருக்கலாம். ஆனால்...அப்படி யார் என் நெருங்கிய விரோதி?...எனக்கு சட்டென்று புரியவில்லையே. எனக்குத் தெரிந்த வரையில் நான் புத்தி தெரிந்த நாளிலிருந்து ஒருவரையும் பகைத்துக்கொண்டதே இல்லை. ஸார்! இந்த கேஸ் விஷயத்தை தீர விசாரித்து நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். அநியாயமாய் என்மீது சாற்றப்பட்டுள்ள அபாண்டத்தை தவிர்க்க வேண்டும். நீங்கள் தான் எனக்குக் கதி" என்று கூறிய அசோகன், இன்ஸ்பெக்டரின் கால்களில் விழாத குறையாக இறைஞ்சி வேண்டி, கண்ணீர் பெருக்கினார்.

"நீங்களும் நிரபராதி...சந்தேகிக்கும்படி விரோதியும் கிடையாது...இப்படி கூறினால் என்ன அர்த்தம்?...உங்கள் வார்த்தையில் ஒரு கடுகளவு உண்மையாவது எங்கள் கண்களுக்குப் புலப்பட்டால்தானே? மேலும்...இவ்வளவு பெரிய முதலோடு வியாபாரம் செய்யும் நீங்கள் உங்கள் கடை சாவியையும், பெட்டி சாவியையும், நீங்களல்லவோ வைத்திருப்பீர்கள். அது எப்படி மற்றொருவரிடம் கிடைத்தது?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. நேற்று எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகப் பூட்டிக்கொண்டு போன சாவியை, இதோ வழக்கம்போல் காலையில் எடுத்து வந்தேன். காணாமலும் போகவில்லையே...அப்படியிருக்கையில்..."

183229

"ஸார்! இதனுடைய மாற்று சாவி எங்கிருக்கிறது? அந்த சாவியை வைத்துக்கொள்ள யோக்கியதையுள்ளவர்கள் யாராவது உங்கள் கடையில் உள்ளனரா? அல்லது வியாபாரத்தில் உங்கள் முதலோடு பங்குபோட்டுள்ள கூட்டாளிகள் உண்டா? கடையில் உள்ள சிப்பந்திகள் அனைவரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் தானா? இப்போது சமீபத்தில் புதிதாக யாராவது வந்திருக்கின்றனரா? யோசித்து, சந்தேகமிருப்பவர்களைக் கூறி சிக்கலைத் தீர்க்க உதவுங்கள்" என்று ரவீந்திரன் கேள்வி மேல் கேள்வி கேட்டு அசோகனைத் திணறவைத்தார்.

சிறிது நேரம் சிந்தித்த பின் அசோகன், எல்லாவற்றிற்கும் பதிலுரைக்கத் தொடங்கினார்.

"ஒரு பூட்டுக்குள்ள இரண்டு சாவிகளில் ஒன்றுதான் இப்போது என்னிடம் இருக்கிறது. இதோ இதுதான்..." என்று சட்டைப் பையிலிருந்து எடுத்து நீட்டினார்.

அதைப் பெற்றுக்கொண்ட இன்ஸ்பெக்டர் "மற்றொன்று?" என்றார்.

"மற்றொன்று, சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு காணாமற்போய்விட்டது. நான் இந்த வியாபாரத்தை ஆரம்பித்த சில வருடங்களிலேயே...என் அன்னையின் ஆசையை நிறைவேற்றும்

பொருட்டு வடக்கே யாத்திரைக்கு அழைத்துச் சென்றேன். என் தலை வெடித்தாலும் பிறரிடம் கொடுக்கமாட்டேன் என் சாவிக் கொத்தை. வழக்கம்போல் என் சட்டைப் பையிலிருந்த கொத்து, கங்கையில் அளைந்து நீராடிவிட்டு கரையேறிய போது காணாமற் மறைந்திருந்தது. காசி விச்வநாதருக்கே அர்ப்பணம் என்று, கங்கையாற்றின் சேற்றில் அமுங்கிய சாவிக் கொத்தை அவருக்குக் காணிக்கையாக்கி விட்டு திரும்பினோம். அன்றிலிருந்து என் கடை, இரும்புப்பெட்டி சாவிகளை வெகு ஜாக்கிரதையாகக் கண்காணித்து வருகிறேன்.''

'' அப்போது மாற்று சாவியைப் பற்றிய சந்தேகமும் இல்லை; வார்த்தைக்கு, இந்த இரண்டாம் சாவியும் கெட்டுவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்...பூட்டுக்களுக்கு தகுந்த சாவி செய்வீர்களோ?''

'' ஓ! அதுவா...நாம் இப்பூட்டுக்களுக்கு அவ்வளவு சுலபமாக சாவி செய்துவிட முடியாது. இவைகளை விற்கும் கம்பெனிகாரர்கள் மிக திறமைசாலிகள். ஒருவருக்குக் கொடுத்த மாதிரி சாவி மற்றவருக்குக் கிடைக்காது. மூன்றாவது வேண்டுமானால் நம் பூட்டு சாவியின் எண்களை எழுதி, என் கையொப்பமிட்ட கடிதம் அனுப்பவேண்டும். முன்புள்ள என் கையெழுத்தோடு ஒப்பிட்டு, த்ருப்தியடைந்தாலொழிய அவர்கள் வேறு சாவிகொடுக்க மாட்டார்கள். நானறியாது, என்கையொப்பமில்லாது அச்சாவியையும் பெறமுடியாது.

'' உங்கள் அந்தரங்கமான, நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் எவரேனும் சாவியைக் கொடுக்கும்படி...கூட்டாளி...

'' ஒரு விஷயம் ஆரம்பித்தால்...அது எங்கெங்கோ கொண்டு போய் விடுகிறது... என்னோடு ஆரம்ப நாள்முதல் பங்குதாரர்கள், கூட்டாளிகள் என்ற பேச்சே இடையாது. இப்போது இரண்டு வருடத்திற்கு முன்புதான் பாலகோபால்-என் பால்ய சிநேகிதன். என் வியாபாரத்தில் சேர்ந்துகொண்டார். இருபத்தையாயிரம் ரொக்கம் கொடுத்து,' அசோக்! என்னிடம் இருப்பதெல்லாம் இவைதான். என்னை நீதான் ஒரு மனிதனாக்க வேண்டும். உன் வியாபாரத்தில் என்னையும் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்' என வேண்டினான்.

என் கடையில் மூன்றுலட்சம்பெறுமானமுள்ள நகைகளோடு நான் வியாபாரம் செய்தாலும், பால்ய சிநேகிதத்திற்காகச் சேர்த்துக் கொண்டேன். நாங்கள் இருவரும் சிறுவயது முதல் ஒன்றாகப் படித்து, விளையாடி, ஒரே படுக்கையில் படுத்து, ஒரே இலையில் உண்டு இணைபிரியாது வாழ்ந்தவர்கள். என்றுமே கைநிறைய மோதிரமணிந்து அழகுபார்க்கும் ஆசையுடைய நான் நகைவியாபாரம் செய்வதிலேயே என் மனதை ஓடவிட்டேன். அதன்படி தொடங்கும்போது, பாலகோபால், நம் ஊரில் விரைவில் கிடுகிடுவென்று முன்னேற முடியாது. அதனால் நாமிருவரும் வெளிநாடு செல்லலாம் என அழைத்தான். ஆனால் என்

வயது முதிர்ந்த தாயாரை விட்டுவர நான் சம்மதிக்கவில்லை. பிறகு சில நாள்வரை நடந்துகொண்டிருந்த கடித போக்குவரத்தும் நாளடைவில் நின்றுபோயிற்று. பல வருடங்கள் கழித்து, வியாபாரத்தில் நஷ்டமடைந்த பாலகோபால் என்னிடம் வந்தான். மனமுடைந்து நொந்த அவனை உற்சாகமூட்டும் வகையில் அவனைச் சேர்த்துக்கொண்டேன்."

"உங்கள் நண்பரைத் தவிர கடையில் வேறு புதிய சிப்பந்தி ஒருவரும் சமீபத்தில் வரவில்லையா? உங்களுக்கு யார்மீது சந்தேகம்?"

"அவன் பெயருக்குத்தான் கூட்டாளியே தவிர பத்து வரவு கணக்குகள், ரொக்கம், எல்லாப் பெட்டிகளின் சாவியும் என் கண் காணிப்பில்தான் இருந்துவருகிறது. ஆனால்...புதிதாகவந்தவன் என்று பாலகோபாலைச் சந்தேகிக்க முடியாது. அவன்மீது எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது. மற்ற சிப்பந்திகளும் வருஷக்கணக்காக என்னிடம் நாணயத்துடன் உழைப்பவர்கள். பாலகோபாலுக்கும், எனக்கும் எந்த நாளிலும் ஒரு சிறு மனக் கசப்பும் ஏற்பட்டதில்லை. எனக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதை அறிந்தால் அதிர்ச்சியால் துடிதுடித்துப் போவான். என் கஷ்டத்தைத் தீர்க்க தன் உயிரையும் த்யாகம் செய்வான். அப்படிப் பட்ட உயிர் தோழன்."

"ஓஹோ...சரி உங்கள் சூழ்நிலையைப் பற்றி ஒருவாறு புரிந்துகொண்டேன். கடை சாவியும் தங்களிடம் இருக்கிறது. வேற்று மனிதரின் பேரில் துளி சங்கையும் கிடையாது. ஆனால்.. தங்கள் கடையில், சங்கரனின் காணாமற் போன நகைகள் சிக்கலன்றி தாங்களே குற்றவாளி என்பதற்கு அத்தாட்சிகளே பெரும்பான்மையாக இருக்கிறது...என்று இன்ஸ்பெக்டர் கூறிக்கொண்டிருக்கையில், அசோகன் இடைமறித்து "ஸார்! எனக்கு மறைக்கத் தெரியாது. எல்லாம் கூறிவிட்டேன். ஆனால்... துப்பு துருவி, அலசிப் பார்க்கும் புத்தி கூர்மையுள்ள போலீஸ் அதிகாரியான தாங்கள் என் வழக்கில் சடாரென்று தீர்மானித்து விடாதீர்கள். ஏதோ சதியாலோசனையில் சிக்கி விதியை அனுபவிக்கிறேன். இன்ஸ்பெக்டர்! நான் நேற்று கடையிலிருந்து போகும்போது என் இரும்புப் பெட்டியில் இந்நகைகள் உண்மையில் இல்லவே இல்லை. அதற்குப் பிறகு வந்திருக்கிறது. என் கடையிலேயே நகைகள் வாங்கும் பெரிய மனிதர்களின் வீட்டில் திருடி எனக்கு என்ன ஆகவேண்டும். உங்கள் மதியின் முன்பு என் வாழ்க்கை ஊசலாடுகிறது சார்!" எனக் கூறிய அசோகன் தலையைக் குனிந்து பெருமூச்சு விட்டார்.

கூசிக் குறுகிய அவரது உடலையும், தொங்கிய முகத்தையும் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. தாளாத துக்கத்தினால் அவர் இதயம் விம்முவது எதிரில் அமர்ந்திருந்த ரவீந்திரனுக்கும் புலப்பட்டது.

(தொடரும்)

இந்தியாவில் குழந்தை க்ஷேமநல இயக்கத்தின் முன்னேற்றம்

இந்தியாவின் எந்தப் பகுதியிலுமுள்ள ஒரு சமுதாய அபிவிருத்தித் திட்ட கிராமத்துக்கு ஒருவர் விஜயம் செய்தால், புதிய பள்ளிக்கூடக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவது, அல்லது குழந்தைகளுக்கான பூங்கா ஒன்றை அமைப்பதற்கான வேலை நடைபெற்று வருவது, அல்லது ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் ஸ்தல சமுதாய நிலையத்தில் இலவசமாக வழங்கப்படுகிற பாலை வாங்கி அருந்துவதற்காக அங்கிலையத்தில் மகிழ்ச்சிகரமாகக் கூடியிருப்பது ஆகிய காட்சிகளை சர்வ சாதாரணமாய்க் காணலாம். இவையெல்லாம், குழந்தைகளைத் தக்க முறையில் பராமரித்துப் பாதுகாப்பது விஷயத்தில் சமுதாயம் கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையை எடுத்துக் காட்டுகின்றன.

வளரும் குழந்தையின் தேவைகள் அனேகம்; எனவே, இந்தியாவில் குழந்தை க்ஷேமநல நடவடிக்கைகள் பல்வேறு வகையான ரூபங்களில் நடத்தப்பட்டுவருவது இயற்கையே. இவைகளில் மிகவும் முக்கியமான பிரச்னை வருஷந்தோறும் ஏராளமான குழந்தைகளை பலி வாங்குகிற மலேரியா, வைசூரி ஆகியவை போன்ற நோய்களைத் தடுப்பதும், சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதுமாகும். எனவே, கிராமங்களிலுள்ள குழந்தை க்ஷேமநல நிலையங்கள் இது விஷயத்தில் விசேஷ அக்கறை எடுத்து வருகின்றன.

குழந்தைகளின் போஷாக்குக் குறைவு, தகுந்த பொழுது போக்கு வசதிகள் ஆகியவை சம்பந்தமான பிரச்னைகளை குழந்தை க்ஷேமநல ஸ்தாபனங்கள் சமாளித்து வருகின்றன. குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. குழந்தைகளுக்கான பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. குழந்தைகளுக்காகச் சுற்றுப்பிரயாணங்கள், விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள், பள்ளிக்கூடத்தில் பகல் உணவுவசதி முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்வதன்மூலம் இப்பிரச்னைகள் சமாளிக்கப்பட்டு வருகின்றன.

மேலே உள்ள படம்: புது டில்லி ஆஸ்பத்திரியொன்றில் குழந்தைகள் வார்டு ஒன்றின் ஒரு பிரிவைக் காணலாம். நாட்டிலுள்ள எல்லா பெரிய ஆஸ்பத்திரிகளிலும் விசேஷ குழந்தைகள் வார்டுகளை ஏற்படுத்துவதற்கான ஒரு இயக்கம் இருந்து வருகிறது.

கீழே உள்ள படம்: குழந்தைகளை மகிழ்விப்பதற்காகவும் அவர்களுக்குக் கல்வி போதிப்பதற்காகவும் தயாரிக்கப்பட்ட விசேஷ

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்)

குளிர்ந்தநெஞ்சம்

வைமுகோ

115-வது நாவல்.

ராதாபாயின் கோபம் மேலும் அதிகரித்துக் கண்கள் சிவக்க "அம்மா! ஏன் உனக்கிந்தத் தயக்கம். நான் வெளியே போனபிறகு அந்த மனிதன் இங்கு வந்தானு? சொல்லு! இம்மாதிரியான துர்வியாதியை வளர்க்கும் டாக்டர் நானல்ல. இதை வேருடன் களைந்தெறிந்து விட்டு அவ்விடத்தில் புனிதமான மலர்ச் செடியை நட்டுப் பயிராக்கும் விவசாயி நான்....தெரிந்ததா! பெத்த தாய்... மகள்....என்ருலும் ஓரளவு எல்லைக் கோலுடன்தான் அன்பும் சுதந்திரமும் கொண்டு பழகவேண்டும். எல்லை மீறினல்....தொல்லை. தொல்லை அதிகரித்தால்...துன்பம். துன்பம் பெருகினல்"...

"ராதா! நிறுத்தம்மா! நீ படித்த பெண். பல விஷயத்திலும் அநுபவமும் ஆற்றலும் வளர்ந்துள்ள வனிதாரத்தினம். மக்களின் பிணியைத் தீர்த்து மகிழ்ச்சியை அளிக்கும் மாணிக்கம். நானே! பெற்ற தாய் என்கிற ஒரே ஒரு பாசச்சரடில் ஊசலாடும் சங்கிலி. இந்தப் பாசம் விரும்புவதெல்லாம் தம் மக்களின் ஆனந்த வாழ்க்கையையும் குடும்ப வ்ருத்தியையும் கோபுரத்திலிட்ட விளக்குபோல் ப்ரகாசிக்கும் புகழையுமே யன்றி வேறல்ல. நீ என்ன சொன்னலும் சரி! உன் பிதாவின் வாக்கை நீ பரிபாலனம் செய்ய வேண்டுவது உனது முதல் கடமை. தவிர அதை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு என்னுடைய பிறப்புரிமையாகும். ஆகையால்"...

என்று முடிப்பதற்குள் அடக்கமுடியாத கோபமும் பரபரப்பும் கட்டுமீறிப் பீரிக்கொண்டு வந்த ராதாபாயிக்கு அதற்குமேல் பொருமை வகிக்கமாட்டாமல் "அம்மா! போதும்! போதும்! உன் வேதாந்தம். இதைவிட ஒரு பெரிய அக்னியை வளர்த்து அதில் விழுந்து அக்னிபகவானைத் தழுவிக்கொள்ளு என்று சொன்னல் அதை நான் ஆனந்தமாய் — தாயின் வாக்கை மந்திரி வாக்காக ஏற்று

மாத்ரு வாக்கிய பரிபாலனத்தை உடனே பரம சந்தோஷத்துடன் செய்து உன்னை மகிழ்விப்பேன். ஆனால் அக்கினிக்கும் மேலான காளாக்கினிபோன்ற அயோக்ய அல்பனை....பெண்களைத் துணிந்து கற்பழித்து உயிர் பலி வாங்கும் கயவனை — கொலைகாரனை—மணக்கும்படி நீ சொல்வதை இந்த ராதாபாய் ஒருபோதும் கேட்கமாட்டாள். இதுபற்றி அதிகமாக ஏதாவது இனி வாலாட்டினால் தாயும் மகளுமாயினும் தனித்த பிரிவினைதான் நேரிடும். அல்லது வேறு எந்த விதத்தில் என் மனம் துணிந்துவிடுமோ தெரியாது. ஜாக்ரதை! இனி நான் பழய ராதாவல்ல. புதிய ராதா! புதிய முறையில், புதிய தோரணையில், புதிய வாழ்கையை இன்றிலிருந்து அமைக்கப் போவதை இப்போதே சொல்லிவிட்டேன். பத்ரம்!" என்று பெண் புலி போல் கோபக் கனல்கக்கக் கூறிக் கொண்டே மேல்மாடிக்குப் போய்விட்டாள்.

உண்மையில் கமலம்மாளுக்கு உலகமே நாட்டியமாடுவதுபோன்ற அதிர்ச்சி உண்டாகி அப்படியே நாற்காலியில் சாய்ந்த சமயம் வேலைக்கார செங்கி ஓடி வந்து கமலம்மாளைத் தாங்கிப் பிடித்தவாறு "அம்மா! மனதைத் தளர விடாதீங்க...நான்தான் அப்பவே சொன்னேனே. இதுவரையிலே என்னைக்காவது தங்கை இப்படி எதிர்த்துப் பேசியிருக்குதுங்களா! சொல்லுங்க. ஏதோ ஒரு இரும்புப் பிடியை அவங்க பிடிச்சிக்கிட்டிருக்காங்கன்னு காலையிலே விரிவா சொன்னேனே. இப்ப தெரியுதா!" என்று சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு வித உணர்ச்சியுடன் கமலத்தின் இதயத்தில் ஆழ்ந்து வேலை செய்யத் தொடங்கியது.

———

லாட்ரி.

"சார்! ஒரு லாட்ரி டிகட் வாங்குங்க. அதிர்ஷ்டம் இருந்தால் 50 ஆயிரம்கூட வரலாம்.

"அடித்துக்கொண்டு போனாலும் போகலாம்...போய்மா... நாங்க சோத்துக்கே லாட்ரி போடுகிறோம். லாட்ரி தொழில் உங்களுக்கு சோறு போடுகிறது. நீங்கள் கேட்காது என்ன செய்வீர்கள்.

" ?........"

6

ஒளிபெற்ற நெஞ்சமும்-வெளிப்பட்ட மர்மமும்

தனியறைக்குச் சென்ற ராதாவுக்குத் தன் வாழ்நாளிலேயே இத்தகைய மகத்தான குழப்பங்களை அனுபவித்தறிந்தது கிடையாது. ஆகையால் இந்த விஷயம் அவள் இதயத்தைப் பெரிய மலைபோல் அழுத்தி வேலை செய்து வாட்டுவதால் அவளுக்கு ஒன்றுமே தோன்றாத வெறுப்பு நிலையில் ஏதோ வெறிபிடித்தவள்போல் கண்களை மூடி மவுனியாய்ப் படுத்திருந்தாள்.

அச்சமயம் ப்ரேமா அங்கு வந்து முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு "டாக்டர்!" என்றழைத்து நின்றாள். ராதாவுக்கு....இது என்ன சனியனோ தெரியவில்லையே! ஆஸ்பத்ரியில் எந்த பேஷண்டுக்கு என்னவாகிவிட்டதோ ....என்கிற புதிய கவலை தோன்றியதால் "என்ன ப்ரேமா! உட்காரு. ஏதோமாதிரி யிருக்கிறாய்....ஆஸ்பத்ரியில் ஏதாவது"....

ப்ரே: டாக்டர்!....பெரிய டாக்டர் உங்களைக் கூப்பிடு கிறார்கள். தவிற....எனக்கு நீங்கள் புடவை பரிசளித்ததைக் கண்டு பலர் பொறாமைப்பட்டு என்னைத் தாறுமாறாக திட்டுவதால் என் மனது கலங்குகிறது டாக்டர்! எனக்கு அந்தப் பரிசும் வேண்டாம். பிறருடைய பொறாமைத் தீயின் ஜ்வாலையும் வேண்டாம். காலை முதல் அழுது அழுது என் முகமே வீங்கிவிட்டது. புடவையை இதோ வைத்துவிட்டேன்.

என்று ப்ரேமா கண்ணீர்ததும்பக் கூறுவதைக்கண்ட ராதாவின் முகம் விம்மியது. அட அக்ரம உலகமே! மக்கள் வாழ்ந்தாலும் கண்டு சகிக்கமாட்டார்கள். தாழ்ந்தாலும் சும்மாவிருக்கமாட்டார்களா! இதுதான் இவ்வுலகத்தில் மக்கள் கண்டறிந்த காக்ஷியா!....என்று குமுறினாள்.

தன்னுடைய சகாவாக வேலை செய்யும் டாக்டர்கள் கூட தன்னைப்பற்றி வித்யாஸமாகப் பேசுவதைக் கேட்டுப் பொறுக்காத ராதாபாய்..."ப்ரேமா! இதற்கெல்லாம் கண்

ணீர் விடாதே. இந்தப் பாழும் உலகத்தின் பச்சோந்தி நிலைமையை நீ இன்னும் ஒரு திவலைகூட அறியாத அப்பாவிப் பெண்ணுகையால் இச் சிறிய சூட்டிற்கே வாடி வதங்கிக் கன்னிவிட்டாய்....சரி...இந்த விஷயமெல்லாம் நம் பெரிய டாக்டருக்குத் தெரியுமா?" என்றாள்.

ப்ரே: தெரியும் டாக்டர்! இன்று அவர்கள் ரவுண்டு போகும்போது தற்செயலாக என்னைச் சந்தித்தார்கள். அப்போது புடவையைக் காட்டி நடந்ததையுங் கூறினேன்....

ராதா: ஓ!....அதற்கவர்கள் என்ன சொன்னார்கள்!

ப்ரே: நீங்கள் சொல்லியது போலவேதான் ஆருதலும் தேருதலும் கூறினார்கள். அவர்கள் என்னிடம் பேசிய சிலநிமிஷத்திற்குள் எத்தனை கண்கள் எட்டி எட்டிப் பார்த்துத் தமதுள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டியது தெரியுமா! அதையும் பெரிய டாக்டர் பார்த்து வியப்புற்றார்கள். அதுவும் தவிர தங்களைப்பற்றி மிக மிக மதிப்புடன் கொண்டாடிப் பேசினார்கள். தங்களுடைய உதவி எனக்குள்ள மட்டும் எத்தகைய குறையுமில்லை. தைரியமாக இரு என்றும் தேருதல் கூறினார்கள்.....

ராதா: அது சரி! எதற்காகப் பெரிய டாக்டர் இப்போது என்னைக் கூப்பிடுகிறார்கள். ஏதாவது கேஸ்கள் வந்திருக்கிறதா....

ப்ரே: அதுவிஷயம் எனக்குத் தெரியாது டாக்டர்! பெரிய டாக்டர் தற்சமயம் தனது விடுதியில் தனிமையில்தானிருக்கிறார்கள். தங்களிடம் பேசவேண்டிய விஷயம் என்னவோ...சொல்லவில்லை. தங்களை அழைத்து வரும்படி சொன்னார்கள். வாருங்கள் டாக்டர்!

ராதா: ப்ரேமா! நீ போய்க்கொண்டே இரு. இதோ நான் வருகிறேன் என்று சொல்லு....என்று கூறியவாறு எழுந்தாள்.

புடவையை வைத்துவிட்டே செல்லும் ப்ரேமாவைப் பார்த்த ராதாவுக்கு மனம் துணுக்குற்றது. சற்று கரகரத்த குரலில் "ப்ரேமா! சற்று நில்லு! இப்படி வா!.... இந்தப் புடவை உனக்கு வேண்டாமல்லவா!....அப்படியானல்...ப்ரேமா! என்னுடைய அன்பு இனிமேல் உனக்குத்

தேவையில்லை அல்லவா? மற்றவர்களுடைய சுடுசரம் போன்ற பொறுமைப் பேச்சுக்களுக்கு உன் இதயம் நடுங்கி தவிக்கும் அளவுக்கு வந்துவிட்டதால் அன்பு பரிசுக்கு அதில் இடம் இருக்காது என்பதுதானே உண்மை.” என்று முடிப்பதற்குள் ப்ரேமா கண்ணீர் பெருக “டாக்டர்! இந்தப் பேதையைப் பரிசோதிக்காதீர்கள். நான் உலகம் அறியாத அப்பாவிப் பெண். உங்களுடைய அன்பு மழையினாலேயே இந்த உயிராகிய பயிர் செழித்து வளருகிறது. தங்களுடைய பேருதவியையும் ப்ரியத்தையும் நான் நினைக்காவிட்டால் என் கண்கள் அவிந்து விடும் டாக்டர்! திக்கற்ற பரதேசிப் பிண்டமாய் இருந்த எனக்கு பிழைக்க வழிகாட்டிய உத்தம தெய்வம் நீங்கள்தான் என்பதை என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி ரத்தமும் ஓலமிட்டுப் பறைசாற்றுவதை ஆண்டவன்தான் அறிவான். டாக்டர்!என்னை நம்புங்கள். திராசு தட்டில் ஒரு பக்கம்உங்களையும் ஒருபக்கம் உலகத்தையும் வைத்தால்கூட துளசிதளம்போன்ற உங்கள் அன்பிற்கு இணையாகாது. மதியீனமாக நான் செய்துவிட்ட இந்தச் சிறு குற்றத்தை மன்னித்துவிடுங்கள். இதோ! இந்தப் புடவையை உங்கள் பாதத்தில் வைத்து எடுத்துக்கொள்கிறேன்”....என்று கூறியவாறு புடவையை டாக்டர் காலில் வைத்து எடுத்துக் கொண்டு வணங்கினாள். ப்ரேமா கூறும் நெஞ்சை அள்ளும் ஈரச்சொற்களைக் கேட்டும் அருவிகளைப் போல் பாயும் கண்ணீரையும் கண்டு ராதாவின் உள்ளம் பாகாய் உருகி கரைந்தது. தாமரை இதழில் தண்ணீர் தேங்குவது போல் ராதாவின் கண்கள் நீர்க்குளமாய் நிறைந்து வழியும் உணர்ச்சியுடன் ப்ரேமாவை அணைத்துக் கொண்டு “ப்ரேமா! கலங்காதே அம்மா! முள்ளுக் குத்தும்போதும் வலி, எடுக்கும்போதும் வலி, யெடுத்த பின்னரும் வலி. அது போல் முள்ளுக்கும் மேலான கூறிய வலிமையுள்ள சொல்லுக்கு எத்தனையோ நோவு இருக்கும் என்பது எனக்குத் தெரியும். மத்தியில் நடந்த இந்தச் சிறு சம்பவத்தை நமக்கு ஒரு படிப்பினையாக பகவான் காட்டியிருப்பதாகவே நான் நினைக்கிறேன். எந்தக் குடிகெடுக்கும் நாய்களின் பேச்சையும் நீ நம்பாதே. பகவான் நம்மை ரக்ஷிப்பார். நீபோ...நான் பின்னாலேயே வருகிறேன்”....என்று அன்பு ததும்பக் கூறினாள்.

ராதாவின் அந்தரங்கமான அன்பைக் கண்டு உள்ளம் பூரித்தவாறு ப்ரேமா இரண்டடி நடந்தவள் எதையோ எண்ணி சற்று அதிர்ச்சியுடன் திரும்பிவந்து “டாக்டர்!”.... என்று பதட்டத்துடன் அழைத்து....“முக்யமான ஒரு விஷ

யத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்! அரை மணி நேரத்திற்கு முன்பு அந்த அயோக்ய வக்கீல் உங்களைத் தேடினர்....தற்செயலாக அப்போது நிர்மலா அங்கு வந்தாளாம். அவளிடம் உங்களைப்பற்றிக் கேட்டா ராம். தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டா ளாம். அப்போது ஒரு கவரை அவளிடம் கொடுத்து 'இதை டாக்டரிடம் கட்டாயம் கொடுத்துவிடுங்கள்' என்று சொன்னராம். அந்தக் கடிதத்தை அவள் வைத்துக் கொண்டு இதில் என்ன இருக்கும் என்கிற நோக்கத்துடன் பார்த்துக்கொண்டே நிற்பதை நான் தெய்வச் செயலாக தூரத்திலிருந்து கவனித்தேன்.

விஷயம் இன்னதென்று தெரியாவிடினும் நர்ஸ் கையில் ஒரு கடிதமிருக்கிறதே! அது என்னவா விருக்கும் என்கிற யோசனையுடன் நான் ஓடி வந்து விசாரித்த பிறகு மேல் கூறிய விஷயங்கள் தெரிந்தது."

பதைபதைக்க "அந்த மனிதன் தான் என்று உனக்கு எப்படி தெரியும்....நிர்மலாவுக்கு அவனைத் தெரியுமா?.... வேறுயாராகவாவது இருந்து அவன் என்று கூறு கிருயா....அக்கடிதம் எங்கே?" என்று ராதா கேட்டாள்.

"அந்த மனிதனை நிர்மலாவுக்கே நன்ருகத் தெரியுமாம். தவிற கவரின் பின்புறம் தன் பெயர் விலாஸம் குறிப்பிடப் பட்டிருப்பதால் எனக்குச் சந்தேகமரத் தெரிந்தது. அக் கவரை நான் தங்களுடைய ட்ராயரில் வைத்துவிட்டேன். கொண்டுவர நினைத்தும் மறந்துவிட்டது. டாக்டர்!...இப் போது கொண்டுவரட்டுமா?" என்ருள்.

ஏற்கெனவே மனதில் புகைந்து கொண்டிருந்த எறிச்சல் பின்னும் அதிகரித்துத் தீயாகமூண்ட வேகத்தில் "அம்மா!" என்று ஒரு ஸிம்மகர்ஜனை செய்து கூப்பிட் டாள். ஏற்கெனவே மனப்போராட்டத்துடன் அவதியுரும் கமலம்மாள் ப்ரேமா வந்தது முதல் வெகு யூகத்துடன் இவர்கள் சம்பாஷணைகளைக் கவனித்துக்கொண்டு ரகஸிய மாக நிற்பதால் ராதா கூப்பிட்ட த்வனியைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்ட அதிர்ச்சியுடன் சில விநாடிகள் சமா ளித்துக்கொண்டு பிறகு அப்போதுதான் அங்கு வந்தவள் போல் நடித்தபடி "ஏம்மா! கூப்பிட்டாயா?"....என்று கேட்டாள்.

ராதா: ஆமாம்! உன்னை வெருமனே கூப்பிடவில்லை. உன்னுடைய மதிப்பிற்குறிய மகானுபாவன் வக்கீலின் வண்டவாளத்தைக் கண்கூடாகக் காட்டி உன்னை மகிழ் விக்கவே கூப்பிட்டேன். இதோ இந்த ப்ரேமாவின் ஜீவியத்தையே பாழடித்த சண்டாளப் பாவி அந்த வக்கீல் தான்....தெரியுமா!" கமலம்மாளின் தலை சுழன்றது. ப்ரே மாவின் வாழ்வை பாழ்படுத்திய சண்டாளன் வக்கிலா!.... என்கிற கேள்வி அவள் இதயத் திரையில் சுருள் சுருளாகச் சுழன்று கண்களையும் சுழலச்செய்தது. ராதா தன் ஆத்திரம் தீர உறத்த குரலில் "என்னம்மா! ஆடு திருடிய கள்ளன்போல் விழிக்கிறாய்! இந்த நிமிடம் வரை யில் இதே ப்ரேமாவை நீ ஒரு சாதாரண நர்ஸ் என்று தானே எண்ணியிருந்தாய்... இன்று உடைத்துவிடுகிறேன்! அந்த ரகஸியத்தையும் தெரிந்துகொள்ளு. அதற்குப் பிறகாவது நீ வாயடைத்துக்கொண்டிருப்பா யல்லவா? இன்று நம்மெதிரில் பரதேசியாய் தன்னந்தனியாய் நிற்கும் இதே ப்ரேமா ஒரு நல்ல உத்யோகஸ்தனின் மகள் தான். பள்ளியில் படித்துக்கொண்டிருந்தாள்.

இவளுக்கு ஒரு சகோதரி மட்டும் உண்டு. தாய் இளம் வயதிலேயே இறந்துவிட்டாள். நீ மகா மேதை யாய்க் கொண்டாடும் உதவாக்கரைப் பயல் இவள் பிதா வுக்கு சிநேகிதனும். ஒரு சமயம் இவளுடைய பிதா மார டைப்பினால் அகால மரணமடையும் தருவாயில் இருக்கும் போது இந்த சண்டாளனிடம் தன் கையிலிருந்த சிறு தொகையும் ஒப்படைத்து தன் இரு கண்களுக்கொப்பான பெண்களைக் காப்பாற்றுவதாக வாக்குத் தரும்படி கெஞ் சிக் கேட்டாராம்.

அதற்கு அந்த சண்டாளப் பாவி வாக்கையும் கொடுத்து தன் போக்கையும் காட்டிவிட்டானாம். இவள் பிதா கொடுத்த சொத்தையும் விழுங்கிவிட்டு நயவஞ்சகத் துரோகியாகி இவள் சகோதரியை சிலமாதங்களுக்குள்ளா கவே கற்பழித்து உலகம் வெருக்கும்படியான நிலையில் ஆஸ்பத்ரியில் கொண்டு தள்ளிவிட்டு இந்தப் பெண்ணை நிராதரவாக விட்டுவிட்டு மறைந்தானாம். திக்கற்ற பரதேசி களாய் தவித்த இவ்விருவருக்கும் ஏன் என்று கேட்பா ரில்லை. ஆதரவும் அளிப்பாரில்லை...

இந்த மகத்தான அவமானத்தைத் தாங்காமல் இவ ளுடைய சகோதரி நாளுக்கு நாள் மெலிந்து இறந்தும் போனாளாம். தன்னம் தனியான இந்த ப்ரேமாவை முதல் முதல் அஸ்பத்ரியில் நான் பார்த்தபோது கண்ணீர் விட்டுக் கலங்கினேன். விஷயத்தைச் சொல்லத்தெரியாத

சிறுமி, அர்த்தமற்ற எதையோ ஒன்றைக்கூறி கலக்கினாள். ஆஸ்பத்ரியிலிருந்த ஒரு ஆயாவிடம் இப் பெண்ணை விட்டு எல்லோருமாக உதவி செய்து வாழ வழிவகுத்தோம்....

ஆறு மாதத்திற்கெல்லாம் என்னை வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள். பிறகு சில வருடங்கள் கழிந்தது. அந்த ஆயா இந்தப் பெண்ணை இங்கு அழைத்து வந்து என்னிடம் ஒப்படைத்துவிட்டு தனக்கு உடல் நலம் சரியில்லாததால் கிராமத்திற்குப் போய் விடுவதாகக் கூறிச் சென்றாள். அப்பொழுது எட்டாவது வகுப்பு வரையில் இப்பெண் படித்திருந்ததால் இவளை நர்ஸ் தொழில் செய்வதற்கான முறையில் பயிலவைத்து இந்த ஆஸ்பத்ரியில் ஒரு நர்ஸ் ஆக்கினேன். சென்ற வருடம் வரையில் இந்த சண்டாளன்தான் இவள் குடும்பத்தைக் கெடுத்த பாவி என்பது எனக்குத் தெரியாது. ஒரு சமயம் குத்துயிர் குலை உயிராக வந்த ஒரு நோயாளியுடன் அந்த அல்ப நாயும் கூட வந்தது. அவனைப் பார்த்தவுடன் ப்ரேமா தீயை மிதித்தவள்போல் அலறி முன் கூறிய விஷயங்களையெல்லாம் அன்றுதான் என்னிடம் சொன்னாள். இவனைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாததால் அவனை விஷமென வெறுத்தேனேயன்றி மேல் ஒன்றும் கவனிக்க விரும்பவில்லை. அதோடு குத்துயிராக வந்த பெண்ணும் மறுதினமே மாண்டுபோனதால் அதோடு அவனைப் பற்றிய விஷயமே மறந்துவிட்டது. அதற்கு வெகு நாட்கள் கழிந்த பிறகு ஒரு கல்யாண வீட்டில் நீ அந்தப் பாதகனைக் காட்டி இவர் ஒரு பெரிய வக்கீல், ஆனா, தோனா அவரக்காய் என்று வர்ணித்துப் பேசியபோது என் சரீரம் எல்லாம் நெருப்புப் பிடித்து எறிவதுபோல் இருந்தது. அன்னியர்கள் மத்தியில் நான் மவுனம் சாதிப்பதை தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை. அதோடு அந்த சனியன் தொலைந்துவிட்டது என்று நினைத்தேன். மறுபடியும் வாலாட்டுவதால் சகல விஷயத்தையும் இன்றே உடைத்துக் கூறிவிட்டேன். அந்த அற்ப மனிதன் என் ஆபீஸ் விடுதிக்குவந்து கடிதம்வேறு கொடுத்துவிட்டு போய் இருக்கிறானாம். இனிமேல் அவன் விஷயத்தைப்பற்றி ஏதாவது நீ ப்ரஸ்தாபித்தாயானால் உனக்கும் எனக்கும் விபரீதமான நிலைமை உண்டாகிவிடும் ஜாக்கிரதை. என்னை பெரிய டாக்டர் கூப்பிடுகிறாராம். நான் போய்வருகிறேன். என்று பட்டாசு வெடிப்பதுபோல் படபடவெனக் கூறிவிட்டு பிரேமாவின் பின்னோடு விடுவிடு என நடந்தாள். கமலம்மாள் நின்ற இடத்திலேயே கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

183229

—●✻●—

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளை ஆகாசவாணி ஸ்தாபனம் ஒலிபரப்பி வருகிறது. அத்தகைய நிகழ்ச்சி யொன்று நடைபெற்றுக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

ரூ. 2-50
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2.
அனாதைப்பெண்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
[illegible]ஞ்சலி
[illegible]வனம்
[illegible]க் குன்று
[illegible]நாடி
திப்பதியும் ராஜாராம்
[முதல் பாகம்]

ரூ. 1-75
கலாநிலயம்
சிலாசாசனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-50
பவித்திரப்புதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-25
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவசந்தா

ரூ. 1-13
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் வினோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

நயாபைசா 75
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

நயாபைசா 50
உருக்க இதயம்
கான கலை
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

தீபஸ்தம்பம் 4-0
உதய சூரியன் 1-25
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-25
தியாகபலி 0-75
ஜயந்திசிந்தனைகள் 1-50
கோதாஹ்ருதயம் 0-75
ஸ்ரீஸ்துதி 0-25

வை.மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
ரூ. 1-50
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
சாந்தி கீர்த்தனம் 3-50

ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம உரை 1-0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.